Registered No. M. 878

# பூர்ணசந்திரோதயம்.

சென்னை ராஜதானியின் தென்பாகத்திலுள்ள
பிரஹ்மஜ்ஞானக் கிளைச்சங்கங்களின் மஹாசபையின்
ஆதரவின்மேல் மதுரையில் பிரதி ஆங்கிலமீ
15உயில் பிரசுரமாகி நடைபெறும்

## மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

தொகுதி 3. } 1913ஆம் பிப்பிரவரிமீ 15உ பரீதாபிஸு மாசிமீ 4உ { பகுதி 10.

ப. நாராயண ஐயர், B. A., B. L., F. T. S.
அ. ரங்கஸ்வாமி ஐயர், B. A., B. L., F. T. S. } பத்திராதிபர்.

வருஷ சந்தா ரூ 2. தனிப்பிரதி அணா 4.

மதுரை:
விவேகபாநு அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

## பொருளடக்கம்.
## (CONTENTS.)


1. ஆலயங்கள் முதலான கட்டிடங்களின்கண் புலப்படுகின்ற சக்திகளின் உண்மை. } ப. நாராயணையர். ௩௦௩
Occult influences in Temples and other buildings. } P. Narayana Iyer.

2. ஸன்மார்க்க முறையில் ஹிதோபதேசம்—ப. நா. ௩௦௯
Instruction to Occultists—P. Narayana Iyer.

3. துகாராம் பாவாவின் சரித்திரம்—A. சிவராவ் ௩௧௭
Life of Tukaram Baba—A. Siva Rao.

4. இட்டாலியா தேசத்திற்கும் துர்க்கிதேசத்திற்கும் நடந்த யுத்தத்திற்குக் காரணம் } கேசவன். ௩௨௫
The true cause of the Turk. Italian War—Kesavan.

5. தீபாவளியின் ஆராய்ச்சி—ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர் ௩௨௭
The Enquiry into the Deepavali Festival } R. S. Narayanasamy Iyer.

6. புத்தகவரவு—பத்திராதிபர் ௩௩௦
Review of Books—Editor.

7. சமாசாரம்—பத்திராதிபர். ௩௩௬
News—Editor.

8. உதாஸீந ஸாது ஸ்தோத்திரம்—ஆர். ஸுந்தரராஜ ஐயர்
Udasina Sadhu Sthothram an Advaita work. } R. Sundararaja Iyer. Supplement.


---


மூன்று ஸஞ்சிகைகள் வெளியாய் விட்டன.

### பக்தமாலா வசனம்.

ஸ்ரீ சாது பாலகிருஷ்ண முதலியாரால் மகாராஷ்டிர பாஷையிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது. இதனை வாசிப்பதினால் தெய்வ பக்தி, வைராக்கியம், நல்லொழுக்கம் முதலியன இருபாலர்க்கும் செவ்வென உண்டாகும். இதில் 182 சிறந்த பக்தர்களின் சரித்திரங்கள் அடங்கியிருக்கின்றன. இச்சரித்திரங்களிலுள்ள விஷயங்களை ஒவ்வொருவரும் வாசித்துதெரிந்து கொள்ள வேண்டியது அவசியம். இது டிம்மி 8 பாரங்கொண்ட ஸஞ்சிகை வடிவமாய் 12 ஸஞ்சிகையில் முடிவுபெறும். சொற்ப காப்பிகளே அச்சடித்து வருகிறோமாகையால் வேண்டியவர்கள் உடனே எழுதி பெற்றுக்கொள்ளவும். 12 ஸஞ்சிகைகளும் முடிந்து ஒரே புஸ்தகமாய் அனுப்பும்பொழுது அதன் விலை வி. பி. சார்ஜ் உள்பட ரூபா 4. ஆகையால் இப்பொழுதே ஆர்டர் செய்துகொள்ளுங்கள்.

சந்தா விவரம்.

| | |
|---|---|
| 12 ஸஞ்சிகைக்கு முன்பணமாக வி. பி. சார்சு உள்பட | ரூ. 2—12—0 |
| சந்தாதாரர்களின் சௌக்கியத்தை உத்தேசித்து இரண்டு தடவையாக வி. பி. யிலனுப்ப சந்தா | ரூ. 1—7—0 |

*Apply to:*—அம்பரோஸியா ஆபீஸ்,
53, பைகராப்ஸ் ரோட், திருவல்லிக்கேணி.

ADVERTISEMENT.

அறிவிப்பு.

உயர்ந்த புத்தகங்கள்! குறைந்தவிலை!

உபநிஷத் அர்த்ததீபிகை என்னும் பெயரால் பிரசித்தம் செய்யப்பெற்ற உபநிஷத்துக்களும், சூத்திரார்த்ததீபிகை என்னும் பெயரால் வெளிவந்த வேதாந்தசூத்ரபாஷ்யம் 9 பாகங்களும், அடியிற்கண்ட குறைந்த விலைக்குச் சொற்பகாலம் விற்கப்படும். வேண்டியவர்கள் தஞ்சாவூரில் கோவிந்தன் அண்ட் பிரதர்ஸ் கம்பெனியிலிருந்தும், சென்னை தம்புசெட்டித் தெரு ரிப்பன்பிரஸ்ஸிலிருந்தும், அடியில் கையொப்பமிட்டிருக்கிறவரிடமிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

புத்தகங்களின் விவரம்.

இவைகளில் ஸம்ஸ்க்ருத மூலமும் தமிழ்பாஷ்யங்களும் குறிப்புரைகளும் அடங்கியிருக்கின்றன.

| | முன்விலை. | இப்போதியவிலை. |
|---|---|---|
| | ரூ அ ப | ரூ அ ப |
| ஈசோபநிஷத் | 1—8 —0 | 0—8 —0 |
| கேநோபநிஷத் | 1—12—0 | 0—10—0 |
| கடம் | 4—0 —0 | 1—8 —0 |
| முண்டகம் | 2—8 —0 | 1—0 —0 |
| மாண்டூக்யம் கவுடபாதர் அவர்களுடைய காரிகையுடன் தமிழில் | 3—8 —0 | 1—8 —0 |
| தைத்திரீயம் | 6—0 —0 | 2—0 —0 |
| சூத்ரார்த்ததீபிகை 9ஸஞ்சிகை | 6—12—0 | 2—4 —0 |

தபால்சார்ஜ் பிரத்யேகம்.

அ. சிவராவ்.

ரிடையர்டு டிஸ்ட்ரிக்ட் ரிஜிஸ்ட்ரார்,
61 நிர். கச்சேரி ரோட்,
மைலாப்பூர்.

## NOTICE.

A Theosophical Book Depot has been opened at the *Hall of Theosophy, Madura* for sale of English and Tamil Theosophical books which are sold very cheap.

V. VENCUSAMI AIYAR,
Manager.
Theosophical Book Depot, Madura.

438

## புஸ்தகம், துண்டுப் பத்திரிகைகள் விளம்பரம்.

| | |
|---|---|
| ஏசுகிறீஸ்து என்பார் ஒழுகிக்காட்டிய ஒழுக்கமுறைநூல். The Imitation of Christ (in Tamil) | 1-0-0 |
| பிராசீந தர்மங்களின் உயர்வும், இக்கால ஆசாரங்களும் | 0-6-0 |
| மனிதனின் வமிசாவளியின் உண்மை | 0-4-0 |
| ஹிந்துமத தூஷண பரிகாரம் | 0-4-0 |
| Avvayar's Yoga aphorisms in English | 0-4-0 |
| கடோபநிஷத் தமிழ்மொழிபெயர்ப்பு | 0-3-0 |
| தைத்திரீயோபநிஷத் தமிழ் மொழிபெயர்ப்பு | 0-3-0 |
| சுவேதாசுவதரோபநிஷத் ஷை | 0-3-0 |
| ஐதரேயோபநிஷத் ஷை | 0-2-0 |
| மௌநவாக்கு | 0-2-0 |
| சந்மார்க்கதீபம் | 0-2-0 |
| ஈசோபநிஷத் தமிழ் மொழிபெயர்ப்பு | 0-1-0 |
| அந்நிபெஸண்டு அம்மையார் சரித்திரம் (செய்யுள்) | 0-1-0 |
| டில்லிதர்பார் மஹோத்ஸவம் | 0-1-0 |
| வெள்ளியம்பலம் என்னும் ஞாநிகளின்சங்கமும் அதனின்று வெளிவரும் ஆசாரிய புருஷர்களும் | 0-1-0 |
| வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர் அவர்களின் சரித்திரச்சுருக்கம் | 0-0-6 |
| ஏசுகிறீஸ்து என்பார் சரிதம் | 0-0-6 |
| தேவாலயம் | 0-0-3 |
| தர்மசாத்திரங்களும் அவைகளின் சீர்திருத்த முறைகளும் | 0-0-3 |
| இந்தியபுத்திரர்களின் சங்கம் | 0-0-3 |
| பிரஹ்மவித்யை (ஆங்கிலத்தில்) | 0-0-3 |
| சிராத்தம் | 0-0-3 |
| சந்மார்க்க சபையை நடத்தும் முறை | 0-0-3 |
| பிரஹ்மஞாந சபையின் யந்திரம் | 0-0-2 |
| பிரஹ்மவித்யை | 0-0-2 |
| அஷ்டமி பிரதக்ஷிணம் | 0-0-1 |
| பிரமஹ்ஞாந சபை | 0-0-1 |
| தசாவதாரங்களின் உண்மை | 0-0-3 |
| மஹாத்மாக்களும், அவர்களை அடையும் மார்க்கமும் | 0-0-3 |

மேற்கண்டவைகளுக்கு 100-க்கு 10 கமிஷன் கொடுக்கப்படும். தபாற் கூலி பிரத்தியேகம். வேண்டுவோர் மதுரை தியஸாபிகல் ஸொஸைட்டி பிரெஸிடெண்டு பி. நாராயணையரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

439

# பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 3. | 1913௵ பிப்பிரவரி௴ 15௳ பரிதாபி௵ மாசி௴ 4௳ | பகுதி 10.

## ஆலயங்கள் முதலான கட்டிடங்களின்கண் புலப்படுகின்ற சக்திகளின் உண்மை.

1. நம் பார்வைக்குச் சில சட்டிடங்கள் சுககரமாயும், ஸந்தோஷகரமாயும், சில கட்டிடங்கள் துக்ககரமாயும், வெறுப்பையும் பயத்தையும் உண்டுபண்ணும் தன்மையனவாயும் தோன்றுகின்றன. தேவாலயங்கள் கம்பீரமாகவும், பக்தியை விளைவிக்கும் தன்மையனவாகவும் காணப்படுகின்றன. இதற்குக் காரணம் என்னவென்று தேவாலயங்களைப்பற்றி மாத்திரம் சற்று ஆராய்ச்சி செய்வோம்.

2. ஸாதாரணமாய்க் கட்டிடங்களின் அமைப்பும், அவைகளின் நோக்கங்களும் அவைகளைப் பார்க்குங்கால் அந்தந்தக் கட்டிடங்களை அமைப்போருடைய மநோபாவங்களை ஞாபகப்படுத்தும். தேவாலயங்கள் என்றால், கடவுளை வழிபடும் ஸ்தானங்கள்; அவை அநேகர் ஈசுவர ஸ்தோத்திரங்கள் செய்தலாலும், பக்தியுடன் ஆராதனை புரிதலாலும் பார்ப்போர் மநத்தில் அத்தன்மையான எண்ணத்தை உண்டு பண்ணும். இக்காலத்தில் தேவாலயங்கள் முதலான கட்டிடங்கள் அதிக சீக்கிரமாய் அதிக பணச்செலவின்மேல் கட்டி முடிவு பெறுகின்றன. அப்படி நடத்தப்படுவதால் வேலை செய்யும் ஜநத்

கள் பொரும்பாலும் கூலியாட்களாகையால், பக்தி, விசுவாஸம் அதிகமாக அவர்கள் மநங்களில் உண்டாகின்றன இல்லை. உண்டாவதற்குக் காரணமுமில்லை. முற்காலத்திலோ அரிய பெரிய ஆலயங்களை நிர்மாணம் செய்திருப்பதில் காலதாமஸமாகியிருந்தாலும், வேலைக்காரர்கள் ஒவ்வொரு கல்லையும் வைக்கும் பொழுதும், ஒவ்வொரு ஸ்தம்பத்தையும் நாட்டும் பொழுதும் பய, பக்தி, விசுவாஸத்துடன் செய்வார்கள். ஒவ்வொரு சமயத்திலும் இறைவனை அந்தக்காரியம் முடிவு பெறும்படி பிரார்த்திப்பார்கள். சிலர்பெயர் வெட்டிய தளவரிசைக் கற்களை பெரிய புராதந ஆலயங்களில் பார்க்கின்றோம். அவை பல பக்தர்களின் அன்பின் மிகுதியைக் காட்டும் சாஸநங்களாகும். இந்தப் பக்தி, இந்த விசுவாசம், இந்தப் பிரார்த்தனை முதலிய ஸத்பாவங்கள் கட்டிடங்களின்கண்ணுள்ள ஸூக்ஷ்ம ஆகாச திரவியங்களில் அமைவதும், பதியும். இத்தன்மையான நற் சிந்தனைகளுடன் நிர்மிக்கப்பட்ட ஆலயங்களில் வந்தனை வழிபாடுகள் செய்ய ஜநங்கள் நுழையுங்கால், முன் பதிவுற்ற சிந்தனை அலைகள் இவர்கள் மநங்களைத் தாக்கும். இவர்கள் மநங்களிலும் அத்தன்மையான சிந்தனைகளை மூட்டும். ஆலயம் புகும் பக்த ஜநங்களும் பக்தியால் ஈசுவரனை ஆராதிக்கின்றமையால் முன்னுண்டாகித் தங்கி நிற்கின்ற ஸத் சிந்தனைகளுடன் இவர்களின் ஸத் சிந்தனைகளும் சேரும். இவ்விதம் பக்தர்களின் கூட்டம் ஒரு ஆலயத்தில் அடிக்கடி ஏற்படுமாயின், அவரவர்களால் உண்டுபண்ணப்பெற்ற நல்ல எண்ணங்களெல்லாம் ஒருங்குசேரச்சேர, அவ்வாலயம் மஹாபுண்ணிய க்ஷேத்திரமாகவும், ஈசுவரன் அருள் விளங்கும் ஸ்தாநமாகவும் அமையும்.

3. மேலும், நம் தேசத்தின் ஆலயங்களின் சுவர்களிலும் ஸ்தம்பங்களிலும், பல தேவர்களுடையவும், ஈசுவராதிகளுடையவும் நாநாவித லீலைகளைக் காட்டும் விக்கிரஹங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை நிர்மாணம் செய்கிற சிற்பியானவன் தன்னை மறந்து அந்தந்த விக்கிரஹங்கள் குறிப்பிடும் தேவ ஸ்வரூபங்களில் முழு மநமும் வைத்து சித்த ஐகாக்ரியம் கொண்டு வேலைசெய்வான். அதனால் அவ்விக்கிரஹங்கள் நன்றாயும் சாஸ்திரப் பொருத்தமாயும் இருப்பதுடன், அவன் அவைகள்பாற் கொண்ட பக்தி, சிரத்தை என்ற நலமான பாவங்களும் அவ்விக்கிரஹங்களிடமே பதியுமன்றோ?

நம் தேசத்தின் விக்கிரஹங்களின் அமைப்பு ஸாதாரணமாய் அழகை மாத்திரம் நோக்கி ஏற்பட்டிருப்பதன்று; சில உயர்ந்த தத்வங்களையும் உண்மைகளையும் பிரதிகப்படுத்திக் காட்டவும் ஏற்பட்டிருக்கின்றது. இவைகளின்கண் அந்தர்கதமாகவுள்ள மநோபாவங்களும் பார்ப்போர் மநத்தைக் கவரும் தன்மையன தவிரவும் மூல விக்கிரஹங்களின் அடிப்பாகத்தில் சில யந்த்ர ஸ்தாபநங்களும் செய்யப் பெறுகின்றன. அந்த யந்த்ர ஸ்தாபநங்கள் மந்த்ர ஸம்பந்தத்துடன் ஏற்படுகின்றன. அவைகளின்கண் ஈசுவர சக்திகள் மந்த்ரங்களின் மூலமாக அமைக்கப்பெறுகின்றன. இச்சக்திகள் சிலவருஷங்களுக்கு ஒருமுறை (குறைந்தபக்ஷம் 25 வருஷங்களுக்கு ஒரு முறை) கும்பாபிஷேகம் என்ற கிரியையால், உயிர்ப்பிக்கப்படுகின்றன.

4. மேலும் நவராத்திரி, சிவராத்திரி, அர்த்தோதய மஹோதய முதலிய புண்ணிய காலங்களில் மஹா புருஷர்கள், ஞாநிகள், ஸித்தர்கள், அறிஞர்கள் கூட்டத்தோடு கூட்டமாய்த் திவ்விய க்ஷேத்திரங்களுக்குத் தாமும் வந்து, அவைகளை நற்சிந்தனைகளாலும், நல்ல வசநங்களாலும், தம் சரீரங்களினின்று வெளிவரும் நலமமைந்த சக்திகளை வெளிவிடுவதாலும் அக்ஷேத்திரங்களைப் புநிதம் பண்ணுகின்றார்கள். ஜநஸமூஹத்தில் நலங்கள் உண்டாக வேண்டுமென ஈசுவரஸ்தோத்திரங்கள் செய்தும், அநுக்கிரஹங்கள் செய்தும் வருகின்றார்கள்.

5. மேலும் அநேக சிவ, விஷ்ணு க்ஷேத்திரங்களில் சில ஸித்த புருஷர்களின் ஸமாதிகளும், அவர்கள் ஸம்பந்தமான சிந்நங்களும் இருந்திருக்கின்றன. பதினெண் ஸித்தக் கூட்டங்கள் தென்னிந்தியாவில் இருந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. அவர்களில் பெரும்பாலர் பூர்ணம் பெற்ற மஹாத்மாக்கள். அவர்களில் அநேகர் உயிருடனே ஸமாதிகொண்டிருக்கிறார் என்று கர்ண பரம்பரையான வசநமுமுண்டு. அவர்கள் ஸம்பந்தமான சக்திகளும் சில ஆலயங்களில் விளங்குகின்றன.

6. புராணங்களில் சொல்லியிருக்கிறபடி சில ஆலயங்களின் மூல விக்கிரஹங்களை சில அவதார புருஷர்களே பிரதிஷ்டை செய்திருப்பதாகவும் அறிகிறோம். அத்தகைய சிரேயஸ்ஸைப் பெற்று

ஆலயங்களில் இராமேசுவரம் பிரஸித்தம் பெற்றது. இதனாலும் இவ்வாலயங்களின் மஹிமை இன்னும் அதிகப்படும். சில ஆலயங்களில் பக்த சிரேஷ்டர்களான நாயன்மார்கள், ஆழ்வாராதிகள், பக்திரஸம் தோய்ந்த பாசுரங்களைப் பாடினமையால் அவ்வாலயங்கள் உயர்நலம் அமைந்துள்ளனவாம். இவைகளைப் பாடல்பெற்ற க்ஷேத்திரங்கள் என்று சொல்லுகிறோம். திவ்விய திருஷ்டி, திவ்விய சிரவண சக்தி பெற்றவர்கள் அவ்வாலயங்களுக்குப் போவாராகில் அம்மஹான்களையும் அவர்களின் கானத்தையும் ஸூக்ஷ்ம பிரக்ஞா பூமியில் இப்போதும் பார்க்கலாம், கேட்கலாம். "தமிழ் மணம் கமழ்கின்றது" என்று ஒரு புண்யவான் ஒரு க்ஷேத்திரத்தின்கண் போகுங்காலத்தில் அதில் சேமித்திருந்த திருமந்த்ரப் புத்தகத்தைப் பற்றிச் சொன்னது இங்கு கவனிக்கத்தக்கது.

7. ஆலயங்களின் கௌரவமும், தன்மையும் இவ்விதமாக இருக்கின்றமையால் பூர்வ ஆலயங்களை இடித்து இக்காலத்து வனப்புக்கும், நாகரிகத்துக்கும், சௌகரியத்துக்கும் தக்கபடி நூதன பிரதிஷ்டையாக மாற்ற முயலுமுன், அதிக கவலையும், பயமும், விசுவாஸமும், ஞானத்தெளிவும் பெறவேண்டும். நம்மிடம் செல்வம், செல்வாக்கு இருக்கின்றனவென்று அகங்காரமும் கர்வமும் கொள்ளாமல் இருத்தல்வேண்டும். சிரத்தை, பயபக்தியின்றி பூர்வ நிர்மாணங்களை யிடித்து, அலங்கோலப் படுத்துவோமாகில் அதிக பாபத்திற்குள்ளாவோம். ஜனஸமூஹத்திற்கு க்ஷேமகரமாய்த் தங்கிநிற்கும் உயர்நலம் அமைந்த சிந்தனைகளையும், பாவங்களையும் கட்டிடங்களை இடிப்பதால் தொலைத்து விடுவோம். கட்டிடங்கள் சிதைந்திருந்து அதனால் ஏதேனும் மராமத்துக்கள் செய்யவேண்டுமானால் பூர்வ நிர்மாணங்களை எம்மட்டில் பாதுகாக்க முயலுகின்றோமோ, அம்மட்டில் பூர்வகர்களின் நன்மையான சிந்தனைகள் என்ற ஸம்பத்தைக் காப்பாற்றி வைப்பதாகும். விஸ்தாரமாகக் கோவில்களைக் கட்டுவதினாலும், நன்றாயும் பலமாயுமுள்ள கோவில்களையிடித்து, நூதன மாதிரியாகக் கட்டுவதினாலும், ஜனங்களுக்கு க்ஷேமமில்லை. ஈசுவர ஸம்மதமுமன்றும்.

8. கவர்னர் ஜெனரலாக இருந்த கர்ஸான் பிரபு அவர்கள், நம் தேசத்தின் பூர்வ கட்டிடங்களைக் காப்பாற்றும் முறையில்

சிரத்தையுள்ளவராக இருந்து ஒரு சட்டத்தை நிர்மாணம் செய்தார் "The Ancient Monuments Preservation Act". இது ஒரு பெரும் புண்ணியமான காரியம். ஆனால் இச்சட்டத்தின் வரம்புக்குள் எல்லா ஆலயங்களும் வரவில்லை என்பதே பெருங்குறையாம்.

9. பூர்வ ஆலயங்களை முற்றும் இடிக்காமல், அவைகளைப் பூர்வ ஸ்திதியில் காப்பாற்றும் முறையில் அவசியமான மராமத்துக்கள் மாத்திரம் செய்வித்தும், அவ்வாலயங்களில் வைக்கப்பட்டிருக்கும் கடைகள், வியாபாரங்கள் முதலியவைகளைத் தவிர்த்தும், அவ்வாலயங்களின்கண் வேதமந்த்ரங்களின் கானமும், நாயன்மார்கள் ஆழ்வார்களுடைய திவ்விய பாசுரங்களைப் பண் முறையில் கானமும் செய்வித்தும், ஆகம முதலிய சாஸ்திரங்களின் உபந்யாஸங்களும், புராணப்படிப்புகளும் விஸ்தாரமாயும், ஒழுங்காயும், முறையாயும் நடத்துவோமாகில், ஈசுவர ஸாந்நித்தியம் அதிகமாக விளங்கும். ஜந ஸமூஹத்திற்கு தேவர்களின் அநுக்கிரஹ வெள்ளம் பெருகும். தேசம் க்ஷேமம் பெறும். அடியிற்கண்ட, ஸ்ரீ மாணிக்கவாசகருடைய பாசுரம் முற்காலத்தில் தேவாலயங்களின் நிலைமையை ஒருவாறு விளக்குகின்றது.

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்,
இருக்கொடு தோத்திர மியம்பினர் ஒருபால்,
துன்னிய பிணைமலர்க்கையினர் ஒருபால்,
தொழுகையர் அழுகையர் துவள் கையர் ஒருபால்,
சென்னியில் அஞ்சலிகூப்பினர் ஒருபால்,
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே,
என்னையும் ஆண்டுகொண்டு இன்னருள்புரியும்,
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே.—திருவாசகம்.

10. ஆலயங்களின் தற்கால நிலைமையைப்பற்றி முன் பிரசுரமாகி வந்த "பிரஹ்மஜ்ஞாந விளக்கம்" என்ற பத்திரிகையில் அடியில் வருமாறு எழுதியுள்ளது:—"கோவிலில் வேதங்கள் ஓதவும், ஆகமங்கள், புராணங்கள் வாசிக்கவும், தேவாரம், திருவாசகம், திருப்பல்லாண்டு, திருவாய்மொழி முதலியவை பாடவும் பற்பல மண்டபங்கள் ஏற்பட்டுள்ளன. அந்தோ! என்ன கொடுமை! என்ன அறிவீனம்? சாஸ்திரத்திற்கு முற்றும் மாறாய், ஈசுவர ஸம்மதமில்லாத

அநீதியான காரியங்கள் இக்காலத்தில் அவைகளின்கண் நடத்தப்பட்டு வருகின்றனவே! பலவித வியாபாரங்கள் நடக்கின்றன. சோற்றுக் கடைகள், மிட்டாய்க் கடைகள், சுருட்டுக் கடைகள் முதலியன ஏராளமாய் ஏற்பட்டிருக்கின்றன. வீணர்களின் கூட்டங்களும், ஆரவாரங்களும், வேடிக்கைகளும், ஆட்டங்களும், பாடல்களும், கூச்சல்களும் அவைகளின்கண் விஸ்தாரமாக கோஷிக்கின்றன. இத்தன்மையான ஆலயங்களிலும் ஈசுவர ஸந்நிதானம் நிகழுமோ? அவர் சக்தியும் விளங்குமோ? இன்னும் சொல்லக்கூடாத அக்கிரமங்களும் அநீதிகளும் நடத்தப்படுகின்றனவே! அதனால் கோவிலின்கண் நுழைந்து ஆராதனை செய்ய அறிவுள்ளார் கூசுகின்றார்கள். இக்கொடியவைகளெல்லாவற்றையும் நிவிர்த்தித்து உண்மைகளை நம்மவர் எப்போது அறிவார்களோ? இத்தன்மையான பிரகிருத நிலைமையானது பூர்வ சிரேயஸ்கரமான ஸம்ஸ்காரங்களைத் தொலைத்துவிடுமென்று நாம் சொல்லாமல் யாவரும் அறிவார்."

சட்டுவித் தார்மதிற் கல்லொன்று வாங்கில்
வெட்டுவிக் கும்மபி டேகத் தரசரை
முட்டுவிக் கும்முனி வேதிய ராயினும்
வெட்டுவித் தேவிடும் விண்ணவ னாணையே.

—திருமந்திரம்.

ப நா.

## ஸந்மார்க்க முறையில் ஹிதோபதேசம்.

(267-ம் பக்கத் தொடர்ச்சி.)

---

13. "வருவன வெல்லாம் வருக. வாராதவெல்லாம் ஒழிக." என மனம் ஸாக்ஷியாக மாத்திரம் இருந்து கடல் அலைபோல உயர்தலும் தாழ்தலுமுள்ள பிரபஞ்ச ஸம்பவங்களைக் கண்ணுறுமாகில், பிரபஞ்ச தர்மமும் ஈசுவர சங்கற்பமும் தாமே நிகழும் என்ற நம்பிக்கையுடனும், ஸத்பத்தையும் சுகிர்தத்தையும் நல்வழிப்படுத்தும் லக்ஷியமாக முன்வைத்துக் கொண்டு ஒருவன் நடை பெறுவானாகில் அவனால் முடிக்கவொண்ணாத செயலு முண்டோ? மேற்கண்ட தர்மத்தை யறியாமல், மனம் ஒரு சமயத்தில் உத்ஸாஹம் பெறுதலும், ஒரு சமயத்தில் ஏக்கமுற்று மனம் தளர்வடைதலும், ஸந்மார்க்க முறையில் நலமன்றாம். கரையோரத்தில் சமுத்திரம் பெருகுதலும் வற்றுதலும் போல் உள்ள உலக ஸம்பவங்களை மனிதன் மேற்கொள்ள வேண்டும். அப்போது தான் மஹாத்மா வென்ற உயர் நலமமைந்த பதவியைப் பெறுதற்கு அர்ஹனாவன். "ஞான முறையில் முயலுகிறவனே! ஜயத்தைக் கோராதவன் போலும் அபஜயத்திற் கஞ்சாதவன் போலும் பொறுமையாயிரு."

14. திரட்டிக்குவித்த சக்திக்கு யாதேனும் ஒரு புகல் விட வேண்டும். வேறு எவ்விதமாகவாவது பரிணமிக்கும் படியாக ஒரு இடம் கொடுக்கவேண்டும். அதை முற்றும் பொய்த்துப்போகும் படியாக அழித்தல் முடியாது. எவ்விதத் தொழிலும் புரியாமல் அதை இருக்கும்படி செய்தல் கூடாது. நம்மால் அடக்க முடியாத வெகுளியுடன் எதிர்த்துப் போர் புரிய முயலுதல் முடியாததாம். நெடு நாளாய்த் திரட்டப் பெற்ற அதன் வேகமும் சக்தியும் வேறு வழிகளில் பிரவேசிக்கப் புகலிடம் கொடாமல் இருப்பின், நம்மால் தடுக்க முடியாதபடி அது அதிகரிக்கும். அறிவை மீறி வெளிப்படும். அதை வசப்படுத்த வேண்டுமானால் நலமுள்ள வேறு வழியில் அதைப் புகட்டவேண்டும். இவ்வாறு, கீழான விஷயத்திலுள்ள பற்றை அல்லது ஆசையை மேலான விஷயத்தில் வைக்கவேண்டும். ஒரு தீமையை அதன் லக்ஷியத்தின் மாற்றத்தினால் நன்மையாகச் செய்திடலாம். வெகுளி அல்லது ஆசைக்குக்

கண் இல்லை. அது வழிகாட்டப்படுமாறு நடைபெறும். புத்தியானது சரியான வழிகாட்டினால் வெளிவிடாமல் அடக்கிய கோபமும் அடக்கிய காமமும் யாதேனும் ஒரு விஷயத்தை நாடி அதைத் தாக்கித் தன் வேகத்தைத் தணிக்கும். இன்றேல் அது உடையோனை நாசமுறும்படி செய்யும். புயலுக்குப் பின் அமைதி அல்லது சாந்தம் ஏற்படுமென்பது பிரபஞ்சதர்மம். காற்று சூந்யமான இடம் இல்லையென்பது பூர்வகர்களின் துணிபு. சூந்யமே பிரபஞ்சத்திலில்லை, அதனால் கோபத்தை சூந்யமாகப் பண்ணுதல் இயலாது. அது போனால் வேறொன்று அதன் ஸ்தாநத்தில் உண்டாகும். ஒன்றை முற்றும் அழித்தல் முடியாததாம். யாதேனும் வேறொன்றை அதன் ஸ்தாநத்தில் அமைக்க வேண்டும். ஆகவே கீழானதை மேலானதாக மாற்ற வேண்டும். தீமையை நன்மையாக மாற்றவேண்டும். ஞாநத்தால் அஞ்ஞாநத்தைப் போக்கவேண்டும். வெளிச்சத்தால் இருளை அகற்ற வேண்டும்.

15. காதுக்குக் கேட்காததும் கண்ணுக்குப் புலப்படாததுமான பரவஸ்துவினிடம் உன் சிந்தனையை ஊன்றிவை. அது தான் உன் ஆசையைத் தொலைக்கும் மருந்து. இம்முறையைத் தவிர ஆசையைத் தொலைக்க வேறு மருந்தில்லை, பலனை விரும்பும் அவாவைத் தவிர்க்க வேறு மருந்தில்லை. காமனைகளால் உண்டாகும் துக்கத்தைத் தவிர்க்க வேறு மருந்தில்லை.

16. தான் மேற்போக சக்தியுள்ளவனெனத் தன்னை நம்பவேண்டும். தான் ஏறவேண்டிய பதம் இவ்வளவு உயர்வாக இருக்கிறதேயென அதைர்யம் கொள்ள வேண்டாம். விஷய ஸுகங்களை நாடி மநம் இளகவேண்டாம். ஒரு கார்யம் சிரமமாயிருக்கிறதென்ற காரணத்தைக்கொண்டு நாம் அதைர்யப்படுதல் அழகன்று. உலகம் மேன் மேலும் நாகரிக அபிவிருத்தி யடைதல், கஷ்டங்கள், கிலேசங்க ளென்ற துவாரங்களின்மூலமாய்த் தான் என்று அறிவாய்.

17. ஸந்மார்க்கத்தில் புகுந்தவன் தைர்யத்தை முதன்மையாய்க் கைக்கொள்ள வேண்டும். தைர்யம் நன்னம்பிக்கையினின்று

பிறக்கிறது. அது தீயது, அதனால் அது விலக்கற்பாலது என நினைந்து அதை விலக்குக. நான் சுத்தமாயிருக்க வேண்டும். அதனால் அதை விலக்க வேண்டுமென எண்ணற்க, அவ்விதம் செய்யற்க. ஆசாரக்கள்ளன் தனக்குச் சேற்றுப் படுக்கையை உண்டு பண்ணிக் கொள்ளுவான்.

18 துக்கம் ஸம்பவித்தது என நொந்து அதை வெறுக்காதே. பிறருக்குக் கைங்கர்யம் செய்வதில் உன்னை மற. பிறர் நிந்தித்தாலும், உனக்குத் துன்பம் விளைவித்தாலும், உன்னை ஹிம்ஸித்தாலும், நீ அவரை எதிர்க்காதே. எதிர்த்தால் அதிக தீமையை உண்டுபண்ணிக்கொள்வாய்.

19. கையில் எடுத்த வேலை முக்கியமாயினும் அமுக்கியமாயினும் உன்னுடைய பூர்ண சக்தியுடன் கொண்டு செலுத்து. தீமையை விலக்கும் உபாயம் அதை அடக்குதலில்லை, அதின் காரணமான ஆசையை ஒழித்தலிலாமென்று அறி. ஆசையை ஒழித்தல் ஞான விஷயங்களில் மனத்தை நிற்கும்படி செய்தலாம். விஷய சுகங்களில் உலாவிச் சிந்தனை கொள்ளும் மனத்தை அவைகளினின்று பெயர்த்து, மேலான பதவியில் அதைப் பதித்தல் வேண்டும். இயற்கையாய்க் கீழானதாகவும், ஆசை பற்றியதாகவும், காமனைகளின் நுகர்ச்சியில் பிரீதியுள்ளதாகவும், பிறரைப் பற்றி நானாவிதமான சிந்தனைகளும் அபிப்பிராயங்களும் கொள்ளுவதிலும், நம்முடைய மனம் பிரவிர்த்தியையுடையது. அதை நல்வழியில் திருப்புதலுக்கு சோதனைகளான கஷ்டங்கள் ஸம்பவித்தல் நலமாம். அத்தகைய ஸம்பவங்களால்தான் நாம் வணக்கம் பெறுகிறோம், பணிவை அடைகிறோம், நம்முடைய அஹம்பாவம் குன்றுகிறது, நம்மை நாம் அறிதலுக்கு ஒரு வழி ஏற்படுகிறது. அதனால் எவ வளவுக் கெவ்வளவு சோதனையான கஷ்டங்கள் நேரிடுகின்றனவோ அவ்வளவுக் கவ்வளவு அவைகளால் மனம் வருந்தாமல் சாந்தத்துடனும் உறுதியுடனும் எல்லாம் ஈசன் செயலென்ற நினைப்புடனும் அவைகளை ஸந்தோஷமாய்ப் பொறுத்துக்கொள்வாய். அப்படிச் செய்வாயாகில் அவைகளின் விஷம் அற்றுப் போகும்.

20. உனக்கு ஆகவேண்டியது ஒன்று மில்லை யென உண்மையாய் உணர்வாய். நீ செய்யும் காரியங்கள் ஈசுவர கட்டளைகளெனவும் கைங்கர்யங்களெனவும் நினைந்து செய். கடவுளை விரும்பு. ஆனால் "அவர் நமக்கு உபகாரம் செய்யப்போகின்றார்" என்ற சிந்தனைகொண்டு அவ்விதம் விரும்பாதே. எக்கார்யத்தைச் செய்தாலும் அதை உன் கடமை யென நினை. அதன் பலனை அநுபவிக்க வேண்டுமென நினையாதே. செய்யும் எல்லாக் காரியங்களையும், செய்பவன் அவை தனக்குப் பலனற்றவை யெனவும், ஆனால் அவை, தன் கடமையின் வரம்புக்குட்பட்டவை யெனவும் நினைத்து, அவைகளைச் செய்வானாகில் அவனுடைய அஹங்காரம் வரவரத் தணியும். பின்பு பொய்த்துப் போம். அது பொய்த்துப் போகவே ஆத்மஞானம் பூர்ணமாய்ப் பிரகாசிக்கும்.

21. சுகம் வந்தாலும் துக்கம் வந்தாலும் அதனால் குறித்த லக்ஷியத்தினின்று மநம் விலகாம லிருக்கட்டும். ஈசன் அல்லது குரு "என்னிடம் வா" என என்னை அழைக்கும் வரையில் உலகத்தாருடன் இருப்பாய். ஜந ஸமூஹத்தின் க்ஷேமத்திற்காகவும் அபிவிருத்திக்காகவும் சுயநலம் கருதாது உழைப்பாய். இது ஒன்றே உனக்கு நலந்தரும். பிறருக்கு ஞாநத்தை அளிக்க உன் ஞாநம் வளரும். இறைக்க இறைக்க, ஊற்றுக்கண் அதிகமாகப் பெருகுமன்றோ? அதனால் உண்மையை நாடும் தீரனே! சிறுகுழந்தைபோல் நன்னம்பிக்கை கொண்ட சிஷ்யனே! சிரத்தையுடன் ஸன்மார்க்கமுறையில் பயிலுவோனே! உன்னிடமுள்ள ஞாநக்களஞ்சியத்தினின்று யாதேனும் ஒன்றை உலகயாத்திரையில் வருந்தி நடைபெறுகிறவனுக்குக் கொடுத்திடுவாய்.

22. "நான், "எனது" என்ற கொடிய விஷப்பாம்பின் விஷத்தின் பயனாய் உரிமையையும் சுதந்தரத்தையும் பாராட்டுகின்றோம்' பாழான வேற்றுமை பாவத்தைக் கொள்ளுகின்றோம். பிறரைக் கண்டிக்கவும், நிந்திக்கவும் கூடாது. பிறர் நம்மைக் கண்டித்தாலும் நிந்தித்தாலும் அதற்கு எதிராக உரையாடாதே.

"அவன் பகைவன்," "இவன் நண்பன்," என நினையற்க. எல்லாரும் உனக்கு குருஸ்தாநத்தில் இருக்கிறார்கள். இஹபரமிரண்டி

னும் ஒரு லாபத்தைக் கருதி எக்கர்மமும் செய்யாதே. ஈசுவர ஸங்கற்பம் நிறைவேறும் வண்ணம் நீ கர்மம் செய்வாய்.

23. நிகழ்காலம் எதிர்காலம் என்பதில் பற்று வைக்காமல் நித்தியமான காலத்தில் நீ இருப்பதாக நடைபெறு. தீமை யென்ற ஆஸாரப்பூண்டு அந்த நித்தியமான காலத்தில் புஷ்பிக்க இயலாது. என்றும் இருத்தல் என்பதற்கு இடையூறான மாசு நித்யநிலை என்ற சிந்தனையின் காற்று படவே நாசமுறும். ஆத்மஞானம் பெறுதலுக்கு மாசற்ற மநம் இன்றியமையாத ஸாதநம். மநத்தைத் தூய்மைப் படுத்தல் இரண்டுவித வழிகளால் இயலும்; (1) தீய எண்ணம் உண்டாதலைத் தடுத்தல். (2) எப்போதும் எது ஸம்பவித்தாலும், அது நலமாயினும் சரி, தீதாயினும் சரியே, அவைகளால் சஞ்சலப் படாமல் மநம் ஸமாதாநத்திலிருக்கும்படியாக முயற்சி செய். இவ்விருவழிகள் நேர்மையாய் நடைபெறுதலுக்கு அன்பும் அருளும் வேண்டும். அவை உன்னுடைய சீலத்தில் அமைவுறும்படியாக முயலுவாய். நாம் பரிசுத்தராய் இல்லை, அதனால் ஞாநமுறையில் நம்முயற்சி வீண் என நினைத்துச் சோம்பலாயிருத்தல் கூடாது. ஒவ்வொருவனும் உயர் லக்ஷியத்தை நாடவேண்டும். அதற்காக சிரத்தையுடன் உழைக்கவேண்டும். நேர்மையாய் உழைக்கவேண்டும். அந்நேர்வழியில் உழைத்தால், முதற்படி மநம் தூய்மை பெறுதலாம்.

24. ஒருவனுக்கு நம்மிடம் கோபம் உண்டாகும்போதும், ஒருவன் பொய் சொல்லும்போதும், பிறருடைய குறைவுகளைப்பற்றி அநாவசியமாக ஒருவன் தூற்றும்போதும், முகஸ்துதியாய் ஒருவன் பேசும்போதும், ஒருவன் பேச்சிலும் செயலிலும் ஸத்யமில்லாதிருக்கும்போதும், ஒருவன் மோசம் பண்ணும்போதும், நம் மநம் சலிக்காமல் தூய்மை பெற்றிருத்தல் வேண்டும்.

25. மோக்ஷம் விரும்புவோன் சிற்றின்பத்தையும், சினத்தையும், பேராசையையும் தவிர்க்கவேண்டும். தைர்யமாய் சாஸ்திர உபதேசங்களை அறிந்து அப்பியஸிக்கவேண்டும். ஆத்மஞாந சாஸ்திரப் படிப்பும், படித்ததை ஸ்வாநுபவத்தில் கொண்டுவர விடாமுயற்சியும் வேண்டும்.

26. ஸ்வலாபத்தைக் கருதுகிறவனும் அதை நோக்கி செயல் புரிகிறவனும் மோக்ஷமார்க்கத்திற்கு அநர்ஹனாவன். மோக்ஷம் என்ற ஸ்தானத்தில் பிருதக் பாவம் (வேற்றுமையான எண்ணம்) என்ற தீய பூண்டு முளையாது. மோக்ஷம் வேண்டுமென அவாக்கொள்ளாமல், தான் இருந்த நிலையில் திருப்தியாகவும் ஸந்தோஷமாகவுமிருப்பவன், முன்னரே மோக்ஷத்தை அடைந்தவனாவன். திருப்தியடையாதவன் மோக்ஷம் மோக்ஷம் என்று வீணாக அவாக்கொண்டே இருப்பான், அதைப் பெறான். பற்றற்ற நிலையே சுதந்தரமும் ஸௌஹிருதமுமுள்ள ஸ்தானம். அதைவிட மோக்ஷம் என்பது வேறு இன்றாம். அடியிற்கண்ட திருவாய்மொழி இங்கு கவனிக்கத்தக்கது.

நன்றாய் ஞானம் கடந்துபோய் நல்லிந் திரியமெல் லாமீர்த்து
ஒன்றாய்க் கிடந்த வரும்பெரும்பா ழுலப்பி லதனை யுணர்ந்துணர்ந்து
சென்றாங் கின்பத் துன்பங்கள் செற்றுக் களைந்து பசையற்றால்
அன்றே யப்போ தேவீ டதுவே வீடு வீடாமே.

27. இலாபத்தை எதிர்பார்த்துக் கர்மம் செய்பவன் இலாபத்தையடையும்வரையில் ஸந்தோஷம் பெறான். இலாபத்தையடைந்த பின், அவன் பெற்ற ஸந்தோஷமும் முடிவுபெறும். யாதேனும் ஒரு கர்மம் செய்ய வேண்டும், அதைச் செய்து முடிக்கவேண்டுமென்ற எண்ணங்கள் இருக்கும் வரையில், ஸ்திரமான சாந்தநிலை இன்றாம், அதனால் ஸந்தோஷம் இன்றாம். இதனால்தான், தைத்திரீய உபநிஷத்தில் ஆநந்த மீமாம்ஸையில் (ஆநந்தம் இன்னதென்பதைப் பற்றிய ஆராய்ச்சி முறையில்) ஞாநஸம்பந்நனாகவும், அகாமியாகவும் இருப்பவனின் ஆநந்தநிலை, பிரஹ்மாநந்தநிலையென வற்புறுத்திப் பன்முறை உபதேசிக்கப்பட்டிருக்கிறது. திருமூலநாயனாரும் அடியில் வருமாறு உபதேசித்துள்ளார்.

ஆசை யறுமின்க ளாசை யறுமின்க
ளீசனோ டாயினு மாசை யறுமின்க
ளாசை படப்பட வாய்வருந் துன்பங்க
ளாசை விடவிட வாநந்த மாமே.

28. பிறனைவிட தன்னைப் பரிசுத்தனாகவும், அறிந்தவனாகவும், தீயவை இல்லாதவனாகவும், ஞாநியாகவும், யாதேனும் ஒரு உயர்

நலமுள்ளவனுகவும், எண்ணுகிறவன் ஞானமார்க்கத்தில் சிஷ்னக இருத்தலுக்கு அர்ஹனல்லன். மோக்ஷ ராஜ்யத்தைப் பெறுமுன் குழந்தையின் மனோநிலையைப் பெறவேண்டும். சீலமும் ஞானமும் உயர்நலமுள்ளவைகள்தான். ஆனல் அவை இறுமாப்பையும், ஜன ஸமூஹத்தினின்று வேற்றுமைப்பட்டவராகவு மிருக்கிறோ மென்ற எண்ணத்தையு முண்டுபண்ணுமாகில், நான் என்ற அஹங்காரப் பாம் பே நேர்த்தியான ஸ்வரூபத்தை எடுத்துக்கொண் டிருக்கிறதென நினைப்பாய். தன்னைத் தியாகம் பண்ணுவதிலும், ஹிருதயத்தினின் றெழும் எல்லாக் காமங்களையும் வேரோடு அறுத்தலும் ஞானமார்க்க விதிகளுக்குள் ளெல்லாம் முதல் விதி. இது சலிக்காத மனஸ் ஸமா தானத்தை யுண்டுபண்ணும். தாமவிக்காமல் உன்னுடைய நல்ல எண் ணங்க ளெல்லாவற்றையும் ஒன்றையும் விடாமல் அப்பியாஸம் செய்வாய். நாம் செய்யும் கர்மத்தின் நோக்கமெல்லாம் அதன் பலனைப்பற்றி இல்லாமல் கர்மத்திலேயே இருத்தல்வேண்டும். கர் மத்தின் பலனை எதிர்பாராமலும் அதனல் கர்மச்சோர்வு இல்லாம லும் இருத்தல் வேண்டும்.

29. சிரத்தையால் ஹிருதயமானது ஆசையினின்றும், மௌட்டியத்தினின்றும் தூய்மைபெறும். ஹிருதயம் தூய்மைபெ றவே சரீரம் ஸ்வாதீநப்படும், ஆதலால், கடைசியில் இந்திரியங்கள் நமது வசப்படும்.

மெய்யுணர்வு பெற்ற ஞானியின் ஸ்வபாவம் இதுவாம். எல்லாக் காமனைகளினின்றும் நீங்கியவனுகவிருப்பான். ஆத்மா ஒன்றே ஆநந்தம். அதுவே ஸுஹிர்தம், மற்றவையாவும் துக்கம் என உண்மையாய் உணர்வான். "வேண்டுதல், வேண்டாமை இலான்." யாது நேரிடினும் மனம் சலிக்கான். எவ்வித நோக்கமும் கொள்ளாத வனுய்ச் செயல்புரிவான். இந்திரியங்கள் அவன் வசப்பட்டு இருக் கும். அஹந்தை, மமதையற்று இருப்பான்.

30. பிறர் நலம் பயக்கும் கர்மத்தைச் செய்யாதவனும், தன்னை விட எளியானுக்கு தன்னல் இயன்ற கடைசிக் கவள உணவைக் கொடாதவனும், ஜாதி ஸமயம் முதலியவற்றைக் கருதாமல் மாற்று

னை ஸஹோதரனெனப் பாவித்து உதவிபுரியாதவனும், எக்காலத்திலும் எவ்விடத்திலும் துக்கத்தைக் கண்டால் அதைத்துடையாதவனும், துயரத்தால் ஏற்படும் மனித அழுகைக்குரல் கேட்கச் செவிகொடாதவனும், அநியாயமாய்த் துன்பப்படுத்தப்படுகிறவனுக்கும் நிந்திக்கப்படுகிறவனுக்கும் ஆதரவாக இராதவனும், உதவிபுரியாதவனும், பிரஹ்மக்ஞாந தர்சநத்திற்கு அதிகாரியல்லன்.

31. உலகவாழ்விற்கு இன்றியமையாத கடமைகள் ஈசுவர ஆக்ஞைபாயிருக்கின்றமையால் ஒருவன் அவைகளைச் செய்யாமல் ஒழித்தல் நியாயமன்று. அவைகளைச் செய்தே தீரவேண்டும். ஆனல் அவைகளைச் செய்யாமற்போனல் யாதேனும் ஒரு துன்பம் நேரிடுமென்றும், அல்லது அவைகளைச் செய்தால் தான் நடைபெறும் வழிகளிலுள்ள இடுக்கண்கள் நீங்குமென்றும் கருதி ஒருவன் கர்மங்களைச் செய்வானகில் பலனை எதிர்பார்த்துச் செய்கிறவனவான் "செய்யவேண்டியவைகள், ஈசுவர ஆக்ஞைகள்," அதனல் அவைகளைச் செய்யவேண்டுமென்று கருதிக் கர்மங்களைச் செய்யவேண்டும். மநச் சஞ்சலம் ஓயும்வரையில் கர்மஞ் செய்தே தீரவேண்டும். அப்படிச் செய்யும் கர்மத்தை ஈசுவரார்ப்பணபுத்தியுடன் செய்யவேண்டும். "பரமாத்மாவும் தானும் ஒன்று" என ஏகிபாவ உணர்வுள்ளவனய் அமைந்து இருத்தலே கர்மம் செய்பவனின் உண்மையான மநோநிலை.

32. இப்பிறப்பு நம்முடைய கார்யமல்ல. நம்முடைய செயலால் இச்சரீரத்தைப் பெற்றோமில்லை. இப்பிறப்பு வேடிக்கை விளையாட்டன்று. இது ஸத்யமானது. இது உண்மை. இதற்கு விரோதமாக தோன்றுதல் ஸத்யமானதன்று என நாம் பெறும் மெய்யுணர்வானது கர்மம் செய்தலினலன்று, நம்முடைய பிரக்ஞையின் மாற்றமாம். மனிதன் விடுபெறல் அவன் கர்மங்களைப்பற்றியதன்று. கர்மங்களின் பிரயோஜநமெல்லாம் பந்தநிலையின் உண்மையை அறிதலுக்கு ஸாதநமாயிருத்தல் மாத்திரந்தான். அறிந்தமேல் கர்மங்கள் ஸாதநங்களல்லவாம். கர்மங்களைச் செய்தல் ஈசுவர ஆக்ஞையென்றும், அவைகளைச் செய்யும் திறமை ஈசுவரனல் நமக்கு ஏற்பட்டதென்றும் மனிதனின் ஸாமர்த்யமன்றென்றும் உணர்ந்து கர்மம் புரிகிறவன் கர்மபந்தத்தினின்று ஸ்வாதந்த்ரியம் பெறுகிறான்.

(இன்னும் வரும்.)

ப. நாராயண ஐயர்.

# துகாராம் பாவாவின் சரித்திரம்.

(289-ம் பக்கத் தொடர்ச்சி.)

---

ஒரு சிறிய கோவிலைக் கட்டி விசுவம்பரர் அந்த மூர்த்தியை அதில் ஸ்தாபித்தார். பிறகு பிரதி ஏகாதசியும் பண்டரீக்குப் போகும் வழக்கத்தை விசுவம்பரர் விட்டு தன்னுடைய கோவில் உத்ஸவம் செய்யத் தொடங்கினர். ஆனால் ஆஷாடம், கார்த்திகம் இந்த மாதங்களின் ஏகாதசி தினம் மட்டும் பண்டரீக்குப் போகும் வழக்கத்தை அவர் தன்னுடைய கடைசி காலம் வரையில் விடவில்லை.

விசுவம்பரருடைய பத்னியின் பெயர் அமாபாயி. இந்த அம்மாளும் பகவத் பக்த பராயணமாக இருந்து விட்டோபாவை விடாமல் பஜித்துக்கொண்டும் பூஜித்துக்கொண்டும் வந்தாள். தன்னுடைய பர்த்தா கட்டின கோவிலில் ஆகவேண்டிய காரியங்களை யெல்லாம் செய்வாள். ஸாதுக்கள் வீட்டுக்கு வந்தால் அவர்களை விசேஷமாய் விசாரிப்பாள். அவளுக்கு ஹரி என்றும் முகுந்தன் என்றும் இரண்டு பிள்ளைகளிருந்தார்கள். தங்கள் தகப்பனர்போல் ஸாத்விக விர்த்தியுடன் கூடினவர்களாய் அவர்களிருக்கவில்லை. க்ஷத்திரிய தர்மத்தை அவலம்பித்துப் பணத்தை ஸம்பாதிக்கவேண்டும் என்ற ஆசைமேலிட்டு அவர்கள் அதைத் தாயாரிடம் தெரியப்படுத்தினர்கள். தாயார், பிள்ளைகளே! இந்த ஊரிலேயே இருந்துகொண்டு பிதாவினுடைய தொழிலையே நடத்திவருவீர்களேயாயின் உங்களுடைய யோக க்ஷேமம் பண்டரீநாதருடைய கிருபையால் நன்றாக நடந்துவரும் என்று சொன்னள். இந்த மாதிரு வசநம் அவர்களுக்குப் பிரியமாயில்லை. அரசனை அடுத்து யுத்தம் செய்து ஐசுவரியத்தை ஸம்பாதிப்பதே புருஷார்த்த மென்ற பாவம் அவர்களிடத்தில் பலமாயிருப்பதைக் கண்டு அவர்களின் இஷ்டப்படி நடப்பதற்குத் தாயாார் அநுமதி கொடுத்தாள். இவ்விதமாக தாயாருடைய அநுமதியைப் பெற்று ஹரியும் முகுந்தனும் இராஜ ஸேவையில் பிரவேசித்து தங்களுடைய சரீர சௌரியத்தாலும் ஜாக்கிரத ஸ்வபாவத்தாலும் இராஜகிருபைக்குப் பாத்திரர்களாகி வாழ்ந்துவந்தார்கள்.

பிறகு தாயாரையும் தங்களுடைய பத்னிகளையும் தங்களிடம் வரவழைத்துக் கொள்ளவேண்டுமென்ற யோசனை வந்து அப்படியே தாயாருக்குக் கடிதம் எழுதி மனிதர்களையும் குதிரைகளையும் அவர்கள் அனுப்புவித்தார்கள். பிள்ளைகளின் அபிப்பிராயத்தைத்தெரிந்து கொண்டவளவில் தாயாருக்கு வெகு யோசனை வந்தது. தன்னுடைய பர்த்தாவால் ஸ்தாபிக்கப்பட்ட தேவாலயத்தை விட்டுப் போவதற்கு மநம் வரவில்லை. ஆயினும் கடைசியில் புத்திர மோஹம் மேலிட்டு அவர்களிடம் போக நிச்சயித்தாள். வீட்டிலுள்ள எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு மாட்டுப்பெண்களையும் அழைத்துக் கொண்டு தன் பிள்ளைகளிடம் சென்றாள். ஆனால் அவ்விடம் அடைந்தபின் அந்த அம்மாளுக்கு சுத்தமாய் மநஸ் ஸமாதாநமில்லை. எந்த தேவதையை இத்தனை வருஷ காலமாய் ஒரே மநத்துடன் தான் ஸேவை செய்து கொண்டு வந்தாளோ, அந்த தேவதையை புத்திர மோஹத்தினால் தான் விட்டுவிட்டு வந்தது சரியல்லவென்று இரவும் பகலும் அவளுடைய மநம் வருந்தியது. பிறகு இவளுடைய ஸ்வப்நத்தில் விட்டோபாவே வந்து, "உன்னுடைய பர்த்தா என்னை தேஹூ வுக்கு வரவழைத்து வைத்திருக்க, நீ புத்திர மோஹத்தில் அகப்பட்டு என்னை விட்டுப்போட்டு இவ்விடம் வந்துவிட்டாய். இது நன்றாயில்லை. உன் ஆசையையும் புத்திரமோஹத்தையும் விட்டொழித்து தேஹூ க்ஷேத்திரத்திற்குத் திரும்பிவா" என்பதாய்ச் சொன்னார். இந்த ஸ்வப்நத்தை அமாபாயி தன் பிள்ளைகளுக்குச் சொன்னாள் அதாவது:—"பிள்ளைகளே உங்களுடைய தகப்பனார் விட்டோபா மூர்த்தியை இந்திரியாணி தீரத்தில் ஸ்தாபித்திருக்கிறார். அதை விட்டுவிட்டு நாம் தூரத்திலிருப்பது சரியன்று, என்றாள். அதற்கு அந்தப் பிள்ளைகள் சொன்னதாவது, அம்மா! "ஸ்வப்நத்தை யாராவது நிஜமென்று சொல்லுவார்களா? நீ ஏன் கஷ்டப்படுகிறாய்? நாம் இவ்வூரில் துன்மார்க்கத்திலிருக்கவில்லை. தநத்தை ஸம்பாதிப்பதிலேயே தத்பரர்களாயிருக்கிறோம், க்ஷத்திரிய தர்மத்தை அநுஸரித்துநடக்கிறோம். ஆகையால் ஒருகாலும் ஈசுவரனுடைய கிருபை நம்மைவிட்டு விலகமாட்டாது, என்று சொன்னார்கள். புத்திரர்களுடைய இந்த மறுமொழியைக் கேட்டு பதில் சொல்ல முடியாமல் தாயார் சும்மா இருந்தாள் ஆனால் மநத்தின் கலக்கம் மட்டும் குறை

வடையவில்லை. மாயாபலத்தால் பிள்ளைகளை விட்டுப்போக மநம் வரவில்லை. பிறகு ஒரு நாள் இராத்திரி, ஸ்வப்நத்தில் விட்டோபாவுக்கு வெகு கோப முண்டானதாயும், இவளுடைய இரண்டுபிள்ளைகளும் யுத்தத்தில் இறந்து விட்டதாகவும், அவர்களுடைய தநமும் செல்வாக்கும் போய்விட்டதாயும், அந்த அம்மாள் கண்டாள். இந்த பயங்காரமான ஸ்வப்நத்தைக் கண்டவுடன் அமாபாயி விழித்துக் கொண்டு பலமாய் அழ ஆரம்பித்தாள். அதைக் கேட்டு அவளுடைய இரண்டு பிள்ளைகளும் விழித்துக் கொண்டு, அவளிடம் வந்து அழுகையின் காரணத்தைக் கேட்டார்கள். அதற்கு அந்த அம்மாள் அந்த பயங்கரமான ஸ்வப்நத்தைச் சொன்னாள். அதற்கும் அவர்களுடைய மநது இரங்கவில்லை. அம்மா உனக்குக் கிழத்தன்மை வந்தபடியால் இப்படிப்பட்ட அசுபஸ்வப்நம் காணப்படுகிறது. இதில் யாதொரு அர்த்தமுமில்லை என்று அவர்கள் சொன்னார்கள். சில நாள் சென்றபின் கர்மவசத்தால் சத்துரு அந்த இராஜ்யத்துக்கு வந்து இரண்டு பிள்ளைகளும் யுத்தத்துக்குப் போகும்படி நேரிட்டது. அவர்கள் வெகு சாமர்த்தியமாய் யுத்தம் செய்தும் கடைசியில் தோல்வி அடைந்து அவர்கள் மரித்தார்கள். ஜயமடைந்தவர்கள் கண்டவிடத்திலெல்லாம் கொள்ளையடிக்க ஆரம்பித்து அமாபாயிவீட்டையும் கொள்ளையடித்தார்கள். பிள்ளைகளின் மரணம் ஸர்வதந நாசம் இவைகளைக் கண்ட அமாபாயீக்கு கரைகாணாத வியஸநம் ஸம்பவித்தது. இளைய பிள்ளையின் பத்நீ க்ஷத்திரிய ஆசாரப்படி ஸஹகமநம் செய்தாள். பெரிய மாட்டுப் பெண் கர்ப்பிணீயாக இருந்தபடியால் பின் வாங்கினாள். இல்லாவிடின் அவளும் ஸஹகமநம் செய்கிறவளே. இவ்விதமாக தன் புத்திராதி நசுவர வஸ்துக்களின் லோபத்தால் விட்டோபாவின் பாதாரவிந்தத்தை விட்டு தான் வந்ததும் ஸகலமும் நாசமுற்றதைக் கண்டு அவளுக்கு வெகு மநஸ்தாபம் ஸம்பவித்தது. மூத்த மாட்டுப் பெண்ணை அழைத்துக்கொண்டு மறுபடியும், அமாபாயி தேஹுவுக்கு வந்து சேர்ந்தாள். பிறகு ஸஹஜமாகவே ஸாதுவாக இருந்த அமாபாயீ வெகு விருத்தி அடைந்தாள். அநேகமாய் ஸர்வகாலமும் விட்டோபாவின் கோவிலிலேயே இருந்து வந்தாள். ஸ்வாமியை இரவும் பகலும் பஜித்தல் பூஜித்தல் இவைகளைவிட வேறு ஒன்றும் அவளுக்குத்

தோன்றவில்லை. வீட்டின் யோகக்ஷேமத்தைக்கவனிக்க மநதில்லாமல் மாட்டுப்பெண் அந்நவஸ்திர விஷயமாயும் வெகுகஷ்டப்படுவதைப் பார்த்து அவளுடைய ஜநந பூமியான நவலாக்கியா உம்பராவுக்கு அவளை அனுப்பிவிட்டாள். பிறகு அமாபாயீக்குக் கண் போய் விட்டது. ஆயினும் பக்திமார்க்கத்தினின்றும் கொஞ்சங்கூட தவறு தலடையாமல் சாகும் வரையிலும் ஸகலத்தையும் தைரியமாகவே பொறுத்துக்கொண்டு வந்தாள். அவள் மரணமாயினள்.

மாட்டுப்பெண் மாமியாருடைய மரணத்தைக் கேள்விப்பட்டு தன் பிள்ளைகளுடன் தேஹூவுக்கு வந்து சேர்ந்தாள். தன் மாமனர் மாமியார் விட்டோபாவினிடத்தில் வைத்திருந்த பக்தியை இவள்பரிபாலித்து வந்தாள். பிள்ளையின் பெயர் விட்டோபா. இவன் தாயாரை அழைத்துக்கொண்டு பிரதி வருஷமும் பண்டரீக்குப் போவான். அவனுடைய பிள்ளையின் பெயர் பதாஜீ. இவனுக்கு சங்கரன் என்ற பிள்ளை பிறந்தான். இந்த சங்கரனுக்கு கான்ஹ என்ற பிள்ளை பிறந்தான். இவன் பிள்ளை ஸோல்ஹோபா. இவன் நம்முடைய துகாராமுடைய தகப்பன். இவர்கள் விடாமல் பண்டரீக்குப் போவார்கள். வியாபாரத்தால் ஜீவநம் செய்தார்கள். ஸோல்ஹோபா வெகு ஸாத்விக புருஷன். ஒருநாளும் பொய்சொல்ல மாட்டான். தான் பிறன் என்றபாவனையில்லாமல் ஸகல பிராணிகளையும் தன்னைப்போலவே பார்ப்பான். இவ்வளவு ஸமாநமான புத்தியும் வைராக்கியமும் இவனிடமிருந்தும் தன் வயிற்றில் புத்திரன் பிறக்கவில்லை என்ற மநஸ்தாபம் மட்டுமிருந்தது. விட்டோபாவின் பிரஸாதம் கிடைக்கவேண்டும், பிள்ளைபிறக்கவேண்டு மென்பதாய் அவனுடைய பத்நீயான கனகாயீ ஸ்வாமியை ஒன்பதுவித பக்தி பூர்வமாக ஸேவித்தாள். இப்படிச் செய்தபின் இவள் கர்ப்பத்தை தரித்து ஒரு பிள்ளையைப் பெற்றாள். இவன் பெயர் ஸாவஜீ. இவர்களுக்கு இன்னும் விட்டோபாவினிடத்தில் அதிக பக்தி உண்டாகி விசேஷமாய் பூஜிக்க ஆரம்பித்தார்கள். மறுபடியும் கனகாயீ கர்ப்பம் தரித்து துகாராம்பாவாவைப்பெற்றாள். பிறகு இன்னும் ஒரு பிள்ளை பிறந்தான். அவன் பெயர் கான்ஹோபா. அவனுக்கு ஒரு தங்கை இருந்ததாகத் தெரியவருகிறது. விவரம் தெரியவில்லை.

## பால்யாவஸ்தை.

துகாராம் பாவாவின் பால்யாவஸ்தையைப் பற்றி விசேஷமாய் விவரம் தெரியவில்லை. ஆனால் விட்டலருடைய பஜனையையும் பூஜையையும் அவர் விசேஷமாய்க்கொண்டாடினார் என்று தெரிய வருகிறது. இவைகளைத் தவிர வேறு விளையாட்டுக்கள் அவருக்குப் பிரியமாயிருக்க வில்லை. ஆனால் பிள்ளைகளின் விளையாட்டுக்கள் அவருக்குத் தெரியாது என்றும் சொல்லக் கூடாது. ஏனென்றால் இவைகளை அவர் வர்ணித்திருக்கிறார். புராணங்களிற் சொல்லிய ஈசுவர லீலைகளை வர்ணிப்பதன்றியில் அவைகளின் ஆத்தியாத்மிக அர்த்தத்தை ஸாமாந்ய ஜநங்கள் அறிந்து கொள்ளும்படிக்கும் எழுதியிருக்கிறார். தந்தை தாய்கள் எப்போதும் விட்டல் பக்தியில் முழுகியிருந்த படியால், அதுவே பிள்ளையின் திருஷ்டியில் எப்போதும் நிறைந்திருந்தது. ஆகையால் தான் துகாராமருடைய பிரவிர்த்தி பால்யம் முதல் ஈசுவரபஜந பூஜந விஷயங்களில் ஸஹஜமாகவே ஏற்பட்டது. இதர பிள்ளைகள் போல் இவருக்கும் மாடு மேய்க்கிற வேலை ஏற்பட்டிருந்தது. இந்த வேலை பிடிக்காமல் எங்கேயாவது ஏகாந்தமான விடத்தில் அவர் போய் உட்காருவார். ஒருநாள் அந்தப் பிள்ளைகள் தாயார் கனகாயி இடம் வந்து, அம்மா உம்முடைய பிள்ளை மாடுகளிருக்குமிடம் இருக்கிறதில்லை, எங்கேயாயினும்போய் உட்காருகிறான், நாங்கள் அவனுடைய மாடுகளையும் பார்த்துக்கொள்ள வேண்டியதாக விருக்கிறது. என்னவிதமாயினும் அவனுக்குச் சொல்லவேண்டும். நாங்கள் பிரதி தினம் அவனுடைய வேலையைச் செய்யமாட்டோம் என்றார்கள். இதைக் கேட்டு கனகாயீ வெகு கோபங் கொண்டு, துகாராமனைப் பார்த்து, உன் கையால் இவ்வளவு வேலையும் ஆகவில்லை. நீ பூமியின் பேரில் எதற்காக ஜீவித்திருக்கிறாய்? ஒரேபிடியாக செத்துப் போக மாட்டாயா என்றாள். இந்த கோபமுள்ள வார்த்தைகளை துகாராம் கேட்டுக் கொண்டு பேசாமல் ஸ்நேஹிதர்களிடம் சென்று, ஸ்நேஹிதர்களே, என் தாயார் செத்துப் போகும்படி சொல்லியிருக்கிறார்கள், எப்படிச் சாகிறது உங்களுக்குத் தெரியுமா! என்று கேட்டார். அப்போது அந்தப் பிள்ளைகள் கழிகளை பாடையாகக் கட்டி

அதன் பேரில் துகாராமனைப் படுக்க வைத்து, எல்லாரும், அவரைத் தூக்கிக் கொண்டு நதிதீரத்திலிருக்கிற மணலுக்குக் கொண்டுபோய், அவ்விடத்தில் ஒருபள்ளந்தோண்டி அவரைப்படுக்க வைத்து மணல் போட்டு மூடித் திரும்பி விட்டார்கள். பிறகு அவர் சுவாஸம்விட முடியாமல் இறந்து போவார் என்று பயந்து அவரை வெளிபடுத்தும் பொருட்டு திரும்பினார்கள். ஆனால் நதியில் தற்செயலாய் பிரவாஹம் வந்தமையால் அவர்கள் அவரிடம் போக முடியவில்லை. அவர்கள் பயந்து ஓடிப்போனார்கள். துகாராம் மட்டும் அங்கேயே இருந்தார். சாயங்காலம் மாடுகள் வீட்டுக்குவந்தன. ஆனால் துகாராமனைக் காணோம். கனகாயீ பயமடைந்து ஸ்நேகிதர்கள் வீட்டுக்குப் போய் விசாரித்துத் தெரிந்து கொண்டாள். உடனே அழுதுகொண்டு அந்த மணல் மேட்டுக்குப்போய் துகாராமனை கூப்பிட்டாள். இந்த சப்தத்தைக் கேட்டு, இருந்த இடத்திலிருந்தே துகாராம் 'ஓ' என்று சொன்னார். இதைக் கேட்டு அந்த அம்மாள் அந்த இடத்துக்கு ஓடிப்போய் துகாராமனைப் புதைத்த இடமிருந்து வெளிப்படுத்தி மாரில் அணைத்துக்கொண்டு, ஏன் இப்படி செய்தாய் என்று கேட்டாள். அதற்கு அவர், அம்மா சாகும்படி சொன்னாய். ஆகையால் நான் இந்தப் படிக்கே செய்தேன் என்றார்.

இதர பிள்ளைகளுக்குப் போல் இவருக்கு தாய் தந்தைகள் எழுதப்படிக்கச் சொல்லிக் கொடுக்கவில்லை. ஆயினும் ஸாதுக்களின் ஸங்கத்தால் வேதங்களையும் புராணங்களையும் சிரவணம் செய்து வெகுஞானம் ஸம்பாதித்திருந்தார். புத்தியும் விசேஷமாயிருந்தது. அக்காலத்தில் துவிஜர்களைத்தவிர இதரர்களுக்குப் படிப்புச்சொல்லிக் கொடுத்தல் வழக்கம் இல்லாததால் துகாராமருக்கும் அதில் பிராப்த மில்லாமற் போய்விட்டது. தகப்பனார் பண்டரீக்கோ அல்லது வியாபார விஷயமாய் இதர இடங்களுக்கோபோன சமயத்தில் கோவில்காரியங்களை துகாராமரே செய்யும்படி நேரிடும். இவைகளை மகப்பூர்வமாய்ச் செய்வார். வீட்டுக்கு வரும் சாதுக்களை விசேஷமாய் ஆதரிப்பார். இவ்விதமாக துகாராம் பால்யம் முதல் பக்திமார்க்கத்திலேயே இருந்து வந்தார்.

## ஸம்ஸாரப் பிரவேசம்.

முன் சொன்னபடி ஸொல்ஹொபாவுக்கு சந்ததிகள் உண்டாகி வியாபாரமும் சரியாக நடந்து வந்து விசேஷ திரவிய லாபமும் கிடைத்தது. அப்போது தன் பிள்ளைகளின் கல்யாணங்களை நடத்தி விட்டார். இவருடைய சம்பத்தால் தகுந்த இடங்களில் சம்பந்தம் ஏற்பட்டது. இப்படி சந்ததி, ஸம்பத்தி, கீர்த்தி இவைகள் மேலிட்டிருந்தும் விட்டல் பஜநத்தில் நியமமாய் தத்பரராகவேயிருந்தார். ஸம்ஸார ஸுகத்தில் முழுகி தேவபக்தியில் குறைவு வருதல், அல்லது அநுசிதமான காரியத்தைச் செய்தல் இவைகளெல்லாம் கெட்டவை, ஹிதத்தைச் செய்யமாட்டா வென்பது அவருக்கு நன்றாகத் தெரிந்திருந்தது. அப்படியே இரவும் பகலும் அவருடைய ஆசரணையுமிருந்தது. பிரபஞ்சத்தில் சமர்த்தன் என்ற பெயரடைந்து வைராக்கியத்தையும் காட்டுதல் ஸுலபமான காரியமன்று. இரண்டும் சாத்தியம் என்பதை ஸொல்ஹொபா தன் நடவடிக்கையில் காண்பித்தார். அவருக்கு வார்த்தக்கியம் வந்த பின் தன் காரியங்களைச் செய்ய சக்தியில்லாததைக் கண்டு, தன்னுடைய மூத்த பிள்ளையாகிய ஸாவஜியைக் கூப்பிட்டு அப்பா, நான் இப்பொழுது கிழவனாய் விட்டேன், வேலைபார்க்க முடியவில்லை, நீ எனக்கு மூத்த பிள்ளை. ஆகையால் இந்த ஸம்ஸாரத்தை நீ இனி நடத்த வேண்டும்; என்னுடைய கொடுக்கல் வாங்கல் விஷயங்களையும் புத்திராதிகளையும் நன்றாகப் பார்த்துக் கொள்ளு என்று சொன்னார். இதைக் கேட்டு ஸாவஜீ கைநொடித்து அப்பா, இந்த பிரபஞ்சத்தில் நுழைந்து நிற்க எனக்குச் சுத்தமாய் ஸம்மதமில்லை, என் ஆயுளை யெல்லாம் தீர்த்தாடநத்திலும், பகவத் பக்தியிலும் செலுத்த வேண்டும் என்று என் சங்கல்பம்! நீங்கள் ஜீவிக்கும் வரை உங்களுடைய கமல சரணங்களை விட்டுப் போக எனக்கு இஷ்டமில்லை. இப்படி செய்தல் சாஸ்திர விருத்தம். ஜநங்கள் பேசவுமிடங் கொடுக்கும். ஆகையால் எனக்கு வீடு இன்னும் விடவில்லை என்று சொன்னான். தகப்பனார் இந்த விரக்தியையும் உதாஸீநத் தன்மையையும் பார்த்து சும்மா இருந்தார். மறுபடியும் அதைப் பற்றி அவனிடம் பேசவில்லை. பிறகு துகாராமனை வரவழைத்து முன் போலவே

சொன்னர். உடனே தகப்பனர் வசநத்தை ஆதரித்து சகல வியவஹாரங்களையும் உத்ஸாஹத்துடன் துகாராம் ஒப்புக் கொண்டார் அவருக்கு அப்போது வயது 13.

இந்த பால்ய வயதிலேயே துகாராமருக்கு ஸம்ஸாரம் ஏற்பட்டும் அதை வெகு ஸாமர்த்தியமாயும் ஹுஷாராயும் நடத்தி வந்தார். கொடுக்கல் வாங்கல் வியாபாரங்களை வெகு பிராமாணிகமாய் நடத்தினர். வெகு சேர்த்தியான புதார்த்தங்களைத் தான் வியாபாரத்துக்கு வைப்பார். மிகவும் வணக்கத்துடன் வியாபாரம் செய்வார். யாராவது எந்த வேலையாவது சொன்னல் தாமஸமின்றியில் மநப்பூர்வமாய்ச் செய்வார். தாய் தந்தைகள் சொல்லும் வேலை எப்படிப் பட்டதாயிருந்தாலும் செய்யாமல் இருக்க மாட்டார். பால்யத்திலேயே அவரிடம் காணப்பட்ட குண விசேஷங்களைப்பார்த்து ஜநங்கள் அவரை ஸ்துதி செய்தார்கள். இதைக் கண்டு தகப்பனரும் நிரம்ப ஆநந்த மடைந்தார்.

துகாராமருடைய முதல் பத்நீக்கு இருமல் உபத்திரவம். ஆகையால் அவருக்கு இரண்டாவது விவாகம்செய்துவைக்க வேண்டுமென்று தாய் தந்தைகள் பூனு பட்டணத்திலிருந்த அப்பாஜி குளவ்யா என்ற தநிக வியாபாரியை பெண்ணைக் கொடுக்கும்படி கேட்க அவரும் ஒப்புக்கொண்டு துகாராமருக்கு இரண்டாவது கல்யாணம் நடந்தது. இந்தப்பெண் நன்ருக வளர்ந்திருந்தாள், கெட்டிக்காரியாயுமிருந்தாள். இவள் பெயர் அவலாயீ என்ற ஜிஜாயீ. மூத்த ஸம்ஸாரத்தின் பெயர் ரகுமாபாயீ.

(இன்னும் வரும்.)

A. சிவராவ்.

# இட்டாலியா தேசத்திற்கும், துர்க்கி தேசத்திற்கும் நடந்த யுத்தத்திற்குக் காரணம்.*

ரிஷிமூலம், நதிமூலம் அற்பமென்று சொல்லுவார்கள். அவ்விதமே உலக ஸம்பவங்களில், யுத்த மூலமும், ஆராய்ந்து பார்க்குங்கால், அற்பமென்றே ஏற்படும். ராமாயணத்தில் சொல்லப்படும் யுத்தத்திற்கு ராவணனின் ஸ்திரீ காமம் காரணம். பாரத யுத்தத்திற்கு திரௌபதையின் நகைப்பு காரணம். அவ்விதமே உலகத்தில் நிகழ்ந்திருக்கும் ஒவ்வொரு யுத்தத்திற்கும் காரணத்தை யோசிப்போமாயின், அஃது அற்பமானதாகவே முடியும். பிரகிருத இத்தாலி துர்க்கி யுத்தத்திற்குக் காரணம் கந்தகச் சுரங்கமாம். அநேக வருஷங்களாக இது வரையில் இத்தாலியா தேசத்தைச் சேர்ந்த ஸிஸிலி (Sicily) தீவினின்று கந்தகச் சுரங்கம் வெட்டி யெடுக்கப்பட்டுப்பின்பு அது சுத்தம் செய்யப்பட்டு உலகம் முழுவதும் விநியோகிக்கப்பட்டு வருகிறது. இக் கந்தகச் சுரங்க வேலையிலும் கந்தகத்தைச் சுத்தப்படுத்தும் முறையிலும், ஸிஸிலி நாட்டார்களில் 5 லக்ஷம் ஜநங்கள் தொழில் செய்து ஜீவநம் செய்கிறார்கள். ஸிஸிலி நாட்டில் சுரங்கத்திலிருந்து கந்தகத்தை வெட்டி யெடுக்கும் விதமும் அதைச் சுத்தம் செய்யும் முறையும் சீர்திருத்தமில்லாமல் பழமையானதாக விருந்துவருகிறது. இப்போது அமெரிக்கா தேசத்தில், ஐக்ய மாகாணத்தில் லாபகரமானவும் யுக்தியோடு கூடினது மாகிய ஒரு முறையைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அதன் மூலமாய் கந்தகச் சுரங்கத்தின் அடி வாரத்தில் கந்தகத்தை வெட்டிக் கட்டிகட்டியாக வெளியேற்றும் முறையைத் தவிர்த்து உற்பத்தி ஸ்தாநத்திலேயே கந்தகத்தை உருக்கி, உருகித்திரவமாயிருக்கிற கந்தகத்தை, ஜலத்தைப்போல பம்பு யந்திரத்தைக் கொண்டு(Pump)மேல் தளத்திற்கு இறைக்கிறார்கள். பின்பு அது வியாபாரத்துக்கு வேண்டிய பிரகாரம் சரக்குகளாக்கப் படுகின்றது. அமெரிக்கர்கள் கந்தக நாடு எங்கே யிருக்கிறதென்று உசாவிப் பார்த்து ட்ரிப்போலி (Tripoli) நாட்டில் கந்தகச் சுரங்கங்கள்

*மதராஸ் மெயில் டிசம்பர் ௴ 4-உ பத்திரிகையைப் பார்க்க.

ஏராளமாய் இருப்பதை யறிந்து அக்கிருக்கிற கந்தகச் சுரங்கங்களில் வேலை செய்ய முயன்றார்கள். நூதந உபாயத்தை அமெரிக்கர்கள் கண்டு பிடித்திருக்கின்றனர். கந்தகத் தொழில் ட்ரிப்போலி (Tripoli)யில் முயற்சி செய்யும் பக்ஷத்தில் ஸிஸிலியின்கந்தக வியாபாரம் பொய்த்துப்போகு மென்று ஸிஸிலிக்குடிகள் இத்தாலி ராஜாங்கத்தாருக்கு முறையிடவே, அமெரிக்கர்கள் ட்ரிப்போலி நாட்டில் கந்தகத் தொழிலைக் கைப்பற்றுதிருக்கும் பொருட்டு ட்ரிப்போலி நாட்டை எவ்விதமாகவாவது பிடித்து விடவேண்டு மென இத்தாலியர்களின் மநத்தில் கெட்டஎண்ணம் உண்டானது. உண்மையான இக்காரணத்தை வெளியிடாமல் பொய்யானதும் மோசமானதுமான சில காரணங்களை வெளிப்படையாக இத்தாலியர்கள் காட்டி அக்காரணங்களால் தூண்டப் பெற்றவர் போல நியாய விரோதமான யுத்தத்தை ஏற்படுத்தி ட்ரிப்போலி நாட்டை துர்க்கியர்களிடமிருந்து அபஹரித்துக் கொண்டார்கள். இத்தாலியா-துர்க்கியின் சண்டையினால் துர்க்கியின் கடல் சேனை, நிலச்சேனை பலங்குறைந்து ஹீநஸ்திதியிலிருக்கும் சமயம் பார்த்து, பால்கன் (Balkan) மலைப்பிராந்தங்களிலுள்ள சிறு நாட்டார்கள் சென்ற அக்டோபர் மாதம் துர்க்கியின் மேல் படையெடுத்து, அந்த ராஜ்யத்தைச் சிக்காபிக்கப்படுத்தி விட்டார்கள். தாமரை இலையின் மேலிருக்கும் வாலரஸம்போல் துர்க்கி ராஜாங்கமானது தத்தளித்துக் கொண்டிருக்கிறது. கந்தகத்தால் துர்க்கி இட்டாலியா சண்டை நேர்ந்தது. அச் சண்டையின் கார்யமாக பால்கன் யுத்தம் நேர்ந்தது. எல்லாம் ஈசன் செயல். அதின் பயனாக துர்க்கி நாடு கேவல ஸ்திதிக்கு வந்து விட்டது.

கேசவன்.

# தீபாவளியின் ஆராய்ச்சி.

1. நமது தேசத்தவர்களால் கொண்டாடப்படும் விசேஷமான பண்டிகைகளில் தீபாவளி யொன்று. தீபாவளி யென்பது தீப வரிசை என்றர்த்தம்.

நம் தேசத்திலும் இதர தேசங்களிலும் தேவோத்ஸவங்கள் ராஜவரவுகள் முதலான தினங்களில் ஜனங்களின் குதூஹலத்துக்குத் தக்கவாறு, தீபங்களேற்றிவைப்பதும் அப்யங்கனங்கள் செய்வதும், நூதனவஸ்த்ரங்கள், நகைகள் தரிப்பதும் இன்னும் பலவிதமாக அவ்விசேஷ தினங்களைக் கொண்டாடுகின்றார்கள்.

இவைகளில் தீபாவளி யென்பதும் ஓர் விசேஷ தினமாய் வெகு காலமாய்க் கொண்டாடப்பட்டு வருகின்றது.

தீபாவளி யென்பது, சாந்த்ரமான ரீதியாய் ஆச்வின கிருஷ்ண சதுர்த்தசி யன்று விடிய ஜாமப் பொழுதில் ஏற்படுகின்றது. நமது தக்ஷிணதேசம் ஸம்பந்தப்பட்டமட்டில் ஸௌரமான ரீதியாய் ஐப்பசிமீ கிருஷ்ண சதுர்த்தசி யன்று ஏற்படுகின்றது. விசேஷமாய் தீபாவளியானது ஸ்வாதி நக்ஷத்ரயுக்தமாயுள்ளது. இப்பண்டிகை அக்டோபர்மீ 16உ முதல் நவம்பர்மீ 16உக்குள் அமைகின்றது.

2. தீப உத்ஸவம் என்று பொருள்படக்கூடிய இப்பண்டிகையானது, நமது தக்ஷிண தேசத்தில், அவ்வாறு தீப அலங்காரமில்லாமல் மற்ற விதமாய் மாத்திரம் கொண்டாடுவதும், இப்பண்டிகைக்கு தீப அலங்காரமே ப்ரதான மென்பதும் நன்றாய்க் கவனிக்கத் தக்கவை. இதனால், முற்காலத்தில் இப்பண்டிகையானது தீப அலங்காரங்களுடன் விசேஷமாய்க் கொண்டாடப்பட்டதென்றும், அக்கொண்டாட்டம் கார்த்திகை மாதம் முதலாவது தினம் முதல் கிருத்திகை நக்ஷத்திர தினம் வரை, பிறப்பட்டுக் கொண்டாடப்படுகின்றதென்றும் நாம் அறிந்துகொள்ளலாம்.

இவ்வளவு விசேஷமாய்க் கொண்டாடப்படும் இப்பண்டிகையின் கருத்தென்ன? அது ஏற்பட்டதின் காரண மென்ன?

3. நரகாஸுரன் என்ற ஓர் அஸுரனிருந்ததாகவும் அவனை ஆச்வின கிருஷ்ண சதுர்தசியில், விடிய ஜாம நேரத்தில் பகவான் கிருஷ்ணன் கொன்றதாகவும், அதனால் தான் அத்தினத்துக்கு நரகசதுர்தசி யென்ற பெயரமைந்ததாகவும், அக்கொடியோன் இறந்த ஸந்தோஷத்தால் இப்பண்டிகை அத்தினத்தில் அமைந்ததாகவும் புராணங்கள் கூறுகின்றன.

மேலும், தீபாவளி தினமானது முற்காலத்தில் வருஷாரம்பம் என்று பல ஆதாரங்களால் விசதமாகின்றது. அதனாலேயே தீபாவளி தினம் முதல், சாந்தரமான கார்த்திகை மாஸம் ஆரம்பிப்பதால், அந்த தினம் முதல் 15-வது தினமான கார்த்திகை ஸம்பந்தமான கார்த்திகை பௌர்ணமி வரை தீபாலங்காரங்கள், தீபோத்ஸவங்கள், வெடிகள் முதலான பலவித விநோதங்களுடன் இப்பண்டிகை கொண்டாடப்பட்டுவந்தது.

4. பின்பு, கி. பி. 6-வது நூற்றாண்டில் வராஹமிஹிரர் காலத்துக்குப் பிறகு முற்றிலும் ஸௌரமான ரீதியாய் தக்ஷிண தேச பஞ்சாங்கங்கள் கணிக்கப்படத் துவங்கின காலம் முதல், அந்த ஸௌரமான ஐப்பசி மாதத்தில் தீபாவளியும், கார்த்திகை மாதத்தில் கார்த்திகை தீப உத்ஸவமும் பிரிந்து விட்டன.

சாந்த்ரமான ரீதியான இப்பதினைந்துதினப் பண்டிகையின் முடிவில், மஹா கிருத்திகை தினத்தில் வாமனாவதாரத்தில் மஹாவிஷ்ணுவால் உதைபட்டுப் பாதாளத்துக் கனுப்பப்பட்ட மஹாபலி சக்ரவர்த்தி இப்பொழுதும் சிரஞ்ஜீவியாயிருப்பதாகவும், வருஷந்தோறும், பூலோகத்துக்கு வருவதாகவும், அந்த தினமான மஹா கிருத்திகை தினமே இவ்வாறு கொண்டாடப் படுவதாகவும் புராணங்கள் கூறுகின்றன.

5. சைத்ராதியே* வர்ஷாதியாய்த் தேசமெங்கும் கொண்டாடப்படும்பொழுது ஐப்பசி மாதத்தில் ஏற்படுகின்ற தீபாவளியை *வர்ஷாதியாகச் சொல்லக் காரண மென்ன?

கூர்ஜரம் முதலான உத்தர தேசங்களில் இப்பொழுதும், தீபாவளி யன்று முந்திய வருஷத்திய கணக்குகளை முடிப்பதும்,

அன்று முதல் வர்ஷாதியாய் புதுக் கணக்குகள் ஆரம்பிப்பதும் வழக்கமாயிருக்கின்றது. அன்று தினம் வரக் கூடாக் கடன்களைக் கழித்து (Write off) விடுவது முண்டு.*

6. ஐரிஷ், வேல்ஸ் புராணங்களின்படி முற்காலத்தில் வர்ஷாதியானது நவம்பர் மாதம் முதல் தினத்தில் ஆரம்பித்ததாய் ஏற்படுகின்றது.

கார்மக் என்பவருடைய அபிதான விளக்க (Glossary) த்தில் முற்காலத்தில் சாத்ருதுவுக்கு முந்தின மாதமே, வர்ஷக் கடைசி மாதமென்றும், சாத்ருதுவின் முதல் தினமே வர்ஷாதி யென்றும் கூறுகின்றார். மேலும், நவம்பர் மாதம் முதல் தினமே, குறிசொல்லு வதற்கும், துர்த்தேவதா உபாஸனைகளுக்கும் உத்தம தினமென்று முற்காலத்தில் அங்கீகரிக்கப்பட்டதாய்த் தெரியவருகின்றது.

கெல்டிக் ஜாதியாரின் பூர்வ அநுஷ்டானப்படி, வர்ஷாதியானது அக்டோபர் மாதக் கடைசி தின மல்லது நவம்பர் மீ முதல் தினத்தில் அவர்களால் கொண்டாடப்பட்டு வந்த உத்ஸவங்களால், இருளால் வெளிச்சமானது தோல்வியடைந்த ஓர் கதையானது ஸூசிக்கப்படுகின்றது.

நோர்ஸ் புராணப்படி, அவர்களின் முக்கிய பண்டிகையானது சாத்ராத்ரம் (Winter Nights) என்று சொல்லப்படும். அது மூன்று நாட் கொண்டாட்டம். அது விசேஷமாய் அக்டோபர் மீ 11௳ முதல் 18௳ வரை ஏற்படக்கூடியது. இப்பண்டிகை தினந்தான் முற்காலத்தில் நோர்ஸ் ஜாதியாரின் வர்ஷாதி யென்று டாக்டர். விக்பூஸன் (Dr. Vigfussan) என்பவர் கூறுகின்றார்.

(இன்னும் வரும்)

ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர்.

---

* ஒருவன் பணம் கொடுக்கமுடியாமல் அவ்வளவு ஐவேசில்லாமற் போய்விட்டால் தீபாவளியாகிவிட்டான் என்றும், திவால் (தீபாவளியின் மருவு) ஆகிவிட்டான் என்றும், இன்றைக்கும் சொல்லுவதை நாம் பார்க்கின்றோம். இதனால் தீபாவளியோடு வருஷக் கணக்கு முடித்து, ஒவ்வொருவனுடைய தகருணக்களைக் (Assets and liabilities) கண்டிப்பது வழக்கமென்று தோன்றும். சென்னைபட்டணத்தில் கூர்ஜரத்து (Gujarates) வியாபாரிகளின் அநுஷ்டானம் இப்போதும் இதுவே.

466

## புத்தக வரவு.

**ஸ்ரீராமசந்திரர்:**—இது ஸ்ரீமத் வால்மீகிராமாயணத்தின் ஸாரம். மாதுஸ்ரீ அந்நிபெஸண்டு அம்மை அவர்கள் காசிநகரத்தில் ஆங்கிலத்தில் செய்த உபந்யாஸங்களை, பண்டிதர் ஸ்ரீமாந் ச. திருச்சிற்றம்பலம் பிள்ளை அவர்கள் எளியதமிழ்நடையில் அழகாய் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். இப்புத்தகம் மிகவும் நம்மவர்களுக்கு உபயோகமானது. நன்றாய் அச்சிடப்பெற்றிருக்கிறது. ஸ்ரீமத் இராமாயணத்தின் கண்ணுள்ள உண்மைகளையும், ஞாநநீதி முறைகளின் உபதேசங்களையும் தெளிவாய்மநத்தில்படியும்படியாய் மாதுஸ்ரீ அந்நிபெஸண்டு அம்மை அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். இதையே நீதிமுறைகளைக் கற்பிக்கும் பாடப்புத்தகமாக, பள்ளிக்கூடங்களில் ஏற்படுத்தி பரவசெய்யவேண்டுவது முக்கியமானதென்று, வித்யாசாலை விசாரணைதார்களுக்குத் தெரிவிக்கிறோம். ஆண், பெண்பாலர்கள், பெரியார் சிறியார் யாவரும் வாசிக்கவேண்டிய புத்தகம் இது. இதன்விலை அணா 12. வேண்டுவோர் மதுரை பிரஹ்மஞ்ஞாநஸபை பிரஸிடெண்டு ப. நாராயணையர் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

---

**வித்யாதர்மபரிபாலந ஸபையின் இரண்டாவது வருஷத்தின் ரிப்போர்டு:**—ஏழைப்பையன்களின் கல்வி கீற்றலில் ஸஹாயம் செய்வதற்காக ஏற்பட்டிருக்கின்ற இந்த ஸபை முதல் வருஷத்தில் விட இரண்டாம் வருஷத்தில் அதிக ஊக்கத்துடன் பிரயோஜநகரமாய் வேலைசெய்திருப்பதைப் பற்றி அறிய ஸந்தோஷிக்கிறோம். இரண்டாம் வருஷத்தில் மொத்தம் வரவு ரூ. 1531. ஸ்ரீஜயந்தி திநத்தில், 700 ஏழைகளுக்கு 30 ரூ. செலவில் திருப்தியாக ஒருவேளை அன்னம் கொடுத்திருக்கிறதும், ஏழை மாணவர்களுக்கு 460 ரூ. படிப்புக்காக திரவிய ஸஹாயம் செய்திருக்கிறதும் மிகவும் மெச்சத்தக்கது. பாங்கியில் ரூ. 1005 இருத்தல் ஸபையின் ஸ்திரமான நிலைமையைக் காட்டுகின்றது. பலதுளி பெருவெள்ளம் என்ற பழமொழிக்கிணங்க பிடி அரிசி கலயம் போட்டும் சொற்ப சந்தாத் தொகைகளையும் வசூலித்தல் மூலமாயும் இந்த ஸபையின் வருவாய் உண்டாகிறது. இன்னும் அதிக முயற்சியின் மேல், அதிகவரும்படி ஏற்படும். அத்துடன் அதிக பிரயோஜநமும் உண்டாகும்.

---

**ஸ்ரீமாந் மு. சின்னையா செட்டியாரின் வியாஸங்களும் உபந்நியாஸங்களும்:**—இப்பெயருள்ள புத்தகம் வரப்பெற்று, படித்து மிகவும் சந்தோஷத்தை அடைந்தோம். ஷை செட்டியாரவர்கள் பல பத்திரிகைகளுக்கு எழுதிய வியாஸங்களும், பலவிடங்களில் செய்த உபந்யாஸங்களும் இப்புத்தகத்தில் அடங்கியிருக்கின்றன. இவைகளின் தமிழ்நடை இலகுவாயும் இனிமை

யாகவுமிருக்கிறது. அடங்கிய விஷயங்கள் மிகவும் பிரயோஜனகரமானவை. இத்தன்மையான புத்தகம் இப்போது தோன்றல் இனி வருங்காலத்தில் நலத்தை முன் குறிப்பதாக அறிகிறோம். நாட்டுக்கோட்டைச் செட்டிகள் நாட்டில் இப்போது அநேக ஊர்களில், கல்வி அபிவிருத்திக்கு அநுகூலமான சங்கங்கள் ஏற்பட்டுவருகின்றன. இந்தப் புத்தகம் கல்விப் பயிற்சி விஷயத்தில் ஊக்கத்தையும் முயற்சியையும் செட்டிநாடுகளில் அதிகப்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை. இப்புத்தகம் செட்டிநாடுகளில் அதிகமாகப் பரவவேண்டுமென்பது எமது பிரார்த்தனை. இப்புத்தகத்தை அச்சிடுவித்த ஸ்ரீமாந் சா. ராம. மு. சித. பெத்தாச்சி செட்டியார் அவர்களுக்கு தமிழ் உலகம் தனி நன்றி பாராட்டக்கடவது. இதன் விலை அணா 12 தான். இதை மதுரை விவேகபாநு அச்சியந்திரசாலையில் பெற்றுக்கொள்ளலாம்.

பத்திராதிபர்.

---

## சமாசாரம்.

**ஆந்திரர்களின் ஸமாஜம்:**—நம்முடைய சென்னை இராஜதானியில் வட ஜில்லாக்களில் தெலுங்கர் என்ற ஆந்திரர்கள் வசிக்கின்றார்கள். அவர்கள் தமிழ்நாட்டிலும் பரவியிருக்கின்றார்கள். அவர்கள் எல்லாரும் ஒன்றுசேர்ந்து அவர்களின் யோகக்ஷேமத்தை அபிவிருத்திசெய்யவேண்டுமென்று முயற்சிக்கின்றார்கள். இக்கருத்துடன் ஆந்திரர்கள் ஸமாஜம் ஒன்று சமீபத்தில்இராஜமஹேந்திரியிலாவது குண்டூரிலாவது கூடும். கல்வி, கைத்தொழில் முயற்சி, இவைகளின் அபிவிருத்தியைப்பற்றி பலவிதமான யத்னங்கள் ஏற்படும். இந்த ஆந்திரஸமாஜத்தின் ஒரு அழகு என்னவென்றால், பிராஹ்மணன் பிராஹ்மணன் அல்லாதவன் என்ற வேற்றுமைகள் உண்டாகாமல் எல்லாஜாதியாரும் ஏகோபித்து பொதுநலத்தைக் கருதி உழைக்கின்றார்கள் என்பதாம்.

---

**ஒரு புராணக்கதையின் தத்வார்த்தம் ஒருவர் எழுதுகிறார்:**—பரமசிவனுடைய சிரஸைக் காண்பதற்காகப் பிரஹ்மா அன்னபக்ஷிரூபத்தை தரித்து மேலாகப் பரந்தும் விஷ்ணு வராஹரூபத்தை தரித்து திருவடிகளைப் பார்ப்பதற்காகப் பூமியைத் தோண்டியும் முயற்சித்தார்கள். விஷ்ணுஸாத்தியப்படாமல் திரும்பிவிட்டார். பிரஹ்மா வெகுதூரஞ்சென்றும் ஸாத்தியப்படாமல் பரமசிவத்தின் தலையினின்று நழுவி எதிர்முகமாய் வந்துகொண்டிருந்த தாழம்பூவைச் சந்தித்துத் தான் பரமசிவத்தின் சிரஸைப் பார்த்ததாகப் பொய்ஸாக்ஷியம் சொல்லவேண்டுமென்று பிரார்த்திக்க, அதுவும்

அதற்கிணங்கவே இருவருமாகத் திரும்பிவந்துவிட்டார்கள். சிவஸந்நிதானத்தில் விஷ்ணு தன்னால் ஸாத்தியமில்லை என்று உள்ளதைச் சொல்லிவிட்டார். பிரஹ்மா தான் சிரஸைப்பார்த்து விட்டதாகச் சொன்னார். தாழம்பூவும் அதற்கநுகூலமாக ஸாக்ஷியம் கொடுத்தது. ஆகையால் பொய்சொன்ன குற்றத்திற்காகத்தாழம்பூ தனது பூஜைக்குப் பிரயோஜநமில்லை என்பதாகச் சிவபிரான் சாபம் கொடுத்துவிட்டார். இக்கதையைப் படிப்பதினால் நமக்கு என்ன தத்வம் விளங்குகின்றதென்பதைப்பார்ப்போம். விஷ்ணு சங்கைத் தரித்திருப்பதால் சப்தத்திற்கு அறிகுறி அதாவது வாக்கு! பரமசிவனே பரப்பிரஹ்மம்; பிரஹ்மம் வாக்கிற்கு எட்டாதது. பிரஹ்மாவே மநத்தின் யஜமாநன் மநத்தின் பகுத்தறியும் சக்திதான் அன்னபக்ஷியாகச் சொல்லப்பட்டிருக்கிறது. வராஹமும் முகத்தால் வேலைசெய்யக்கூடிய மிருகமானபடியால் வாக்கிற்காக அறிகுறியாக ஏற்பட்டிருக்கிறது. மநத்திற்குப் பிரஹ்மம் எட்டமாட்டாதாயினும் களைத்த சமயத்தில் எட்டியதுபோல் தோன்றும். அச்சமயம் அவ்விதம் களைப்படைந்த மநத்திற்கு ஸ்தூலமூளை இணங்கி எட்டிவிட்டதாகச்சொல்லும். அது பொய்யே. ஸ்தூலமூளை தாழம்பூவிற்கு அறிகுறி. சிரவில் உள்ளது நழுவும் தன்மையுடையது. பிரஹ்மத்தை அறிய மநம் சேர்ந்த ஸ்தூல மூளையும் பிரயோஜநமில்லை. ஸ்தூலமூளை எப்பொழுதும் பொய்யே சொல்லும். பிரஹ்மம் மநம் வாக்கிற்கு எட்டமாட்டாதென்பதற்காகத் தான் இக்கதை ஏற்பட்டது போலும்.

---

**தேவகோட்டையில் ஹைஸ்கூல் ஸ்தாபித்தல்:**—சென்றமீ 27உ தேவகோட்டையில், கநம்தங்கிய சோமசுந்தரம் செட்டியார் அவர்கள், சென்னை சட்டநிருபண சபைக்கு,அங்கத்தினராகத்தெரிந்தெடுக்கப்பட்டிருப்பதை உத்தேசித்து, அவர்களுக்கு விருந்து அளிக்கப்பட்டது. பெரிய சபை ஏற்பட்டது. அநேகர் கூடினார்கள். அவ்வூர் டிப்டி கலெக்டர் மகா-ா-ா-ஸ்ரீ கே. நாராயணஸ்வாமி ஐயர் அவர்கள் அக்கிராஸநம் வகித்தார்கள். அநேக உபசாரங்கள் நடைபெற்றன. கடைசியாக அக்கிராஸநாதிபதி அவர்கள் கல்வியின் உயர்வைப்பற்றிப் பேசி,கூடியதினம், டெல்லியில் சட்டநிருபண ஸபை முதல் முதல் கூடுகிற தினமென்றும்அந்த சுபதினத்தின் ஞாபகார்த்தமாக, தேவகோட்டையில்,ஒரு ஆங்கிலப் பள்ளிக்கூடம் ஸ்தாபித்தல் வேண்டுமெனச் சொன்னார்கள். கூடியிருந்தவர்கள் ஒரு ஹைஸ்கூல் ஸ்தாபிக்கவேண்டுமென்றும்,அதற்கு 50,000ரூ அவசியமென்றும் தீர்மானித்தார்கள். அங்கிருந்த சில தநவான்கள் சில தொகை கொடுப்பதாக கையொப்பம் வைத்தார்கள் என ஸ்வதேசிய மித்திரன் பத்திரிகையால் தெரியவருகிறது. இது மிகவும் நல்ல விஷயம். நகரத்தார்களுக்கு இருக்கும் ஏராள

மான திரவியத்திற்கு இந்த பள்ளிக்கூடம் ஸ்தாபிப்பது ஒரு பெரிய காரியமில்லை. சீக்கிரம் இந்த நல்லவிஷயம் ஏற்படும் என்று எதிர்பார்க்கிறோம். இத்தகைய கல்விச்சாலை இதுகாறும் ஏற்படாமலிருந்தது மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. நாட்டுக்கோட்டை செட்டிகள் பல இடங்களில் வியாபாரம் செய்து வருகிறதில் ஆங்கிலப்படிப்பில்லாமையால் அந்தவியாபாரம் விரிந்து உயர்வு பெறாமல் இருந்த ஸ்திதியிலேயே அநேக விடங்களிலிருக்கின்றது. சில விடங்களில் க்ஷீணதசையையும் அடைந்திருக்கிறது இனி நிர்மாணம் செய்யப்பெறும் வித்தியாசாலையில், வியாபாரதோரணைக்கு அநுகூலமான படிப்பும் (Commercial Education) கற்பிக்கபடுமாகில் அது மிகவும் நலந்தரும். முன்னரைவிட 10 பங்கு அதிகமாக பலதுறைகளில் வியாபாரம் நடத்தக்கூடும். செட்டிகளின் செல்வமும் செல்வாக்கும் அதிகப்படும். இது நல்லசமயம். தீர்மானித்த காரியத்தை சோர்வுபடவிடாமல் அநேகதநவான்கள் முன்வந்து நிலை நிறுத்தும்படியாக ஈசன் அருள்புரிவாராக.

---

1 மணிக்கு 150 மைல் ஓடக்கூடிய ரயில் வண்டி:—ரயில்வண்டி 1 மணிக்கு 150 மைல் போகக்கூடியதாய் ஒருவர் சில உபாயங்களைக் கண்டுபிடித்திருக்கிறார். அந்த வண்டி ஒரே ஒரு ரயிலில் போகிறதாம். அபாயத்திற்கு உள்ளாகாதபடி வண்டிக்கு மேல் ஒரு ரயில் கம்பி போகிறதாம். அவ்விரண்டுக்கும் மத்தியில் குழல் போல் போகிறதாம். ஆட்ட மில்லையாம். அதிகவேகமாய்ப் போவதால் பிரயாணிகளுக்கு சிரமமில்லையாம். இவ்வண்டியை ஓட்டுவதில் இரண்டு ரயில் கம்பிகளில் போகும் வண்டியை ஓட்டுவதைவிட செலவு சுருக்கமாம். இதை விரிவான அநுஷ்டானத்தில் கொண்டு வருவதற்கு ரயில்வண்டி Engineer நிபுணர்கள் பரீக்ஷித்துக் கொண்டிருக்கிறார்கள். இத்தகைய வண்டித் தொடர் அநுஷ்டானத்திற்கு வரும் பக்ஷத்தில், உலகத்திற் காரியங்கள் இன்னும் தீவ்ரமாய் நடக்கும். உலகமோ சுருங்கும்.

---

ஆல்கோஹாநா என்ற பத்திரிகையில் அடியில் வருமாறு இந்திய ஆரியர்களைப்பற்றிச் சொல்லியிருக்கிறது:—அந்யதேசத்திற்குக் கடல் மார்க்கமாகவும் தரைமார்க்கமாகவும் யாத்திரை செய்து, ராஜ்யங்களை (Colonies) முதன் முதல் ஸ்தாபித்தவர்கள் இந்திய ஆரியர்கள் எனத் துணியலாம். இந்திய ஆரியர்கள் அவ்விதம் செய்திருக்கலா மென்பதற்கு அநேக இடங்களில் ஆரிய நாகரிகச் சின்னங்கள் அகப்படுகின்றன அவையாவன, எகிப்துதேசம், கிரீஸ்தேசம், ஸ்காண்டி நேவியா, ஜெர்மனி

இட்டாலியா, இங்கிலாண்டு தேசம், ஸைபீரியா, பாரவீகம், துர்க்கிஸ்தான், மெக்ஸிகோ, சீனு, ஜப்பான், பஸிபிக்மஹா ஸமுத்திரத்தில் பல தீவுகள்.

---

வருகிற மார்ச்சு௴ 22, 23-ம் தேதிகளில் தமிழ் ஜில்லாக்களிலும் மலையாளம் ஜில்லாக்களிலுமுள்ள பிரஹ்மக்ஞான கிளைச் சபைகளின் மஹா சபை, திருநெல்வேலியில் கூடும். பிரஹ்மக்ஞான ஸபையைச் சேர்ந்த அநேகர் கூடுவார்கள். சென்னபட்டணம் ஆதியாற்றினின்று சிலபிரமுகர்களும் வருவார்கள்.

---

சென்ற ௴ 27உ டில்லிமாநகரத்தில் கநந்தங்கிய வைஸ்ராய் அவர்களின் சட்ட நிரூபண சபை முதன் முதல் கூடியது. ஸமீபத்தில் நடந்த விபத்தினால் நேரிட்ட வியாதி கொஞ்சம் சுவஸ்தமாகி கநந்தங்கிய வைஸ்ராய் ஹார்டிஞ்ஜ் பிரபு அவர்கள் ஸபையின் அக்கிராஸநத்தை சற்றுநேரம் வகித்து முகவுரையாக சில அருமையான வசநங்கள் வசித்தார்கள், அவைகளில் ஒன்று இதுவாம்:—

“சென்ற டிஸம்பர்௴ 23உ நடந்த விபத்தில் என் தேஹத்தின் பாதுகாப்பின் பொருட்டு நான் யாதொருவித எச்சரிக்கையும் அதிகமாக எடுத்தக் கொள்ளவில்லை. ஏனென்றால் இந்தியர்கள் எனக்கு துரோஹம் செய்யமாட்டார்களென்று பூர்த்தியாக நம்பி அன்று பட்டணத்தில் பிரவேசித்தேன். இப்போதும் இந்தியர்கள் யாதொரு வித தீங்கும் செய்யமாட்டார்களென்று பூர்ணமாக நம்புகிறேன்.”

இந்த விபத்துக்குக் காரணஸ்தனான பாதகனை இன்னும் கண்டுபிடிக்கவில்லையென்றறிய வெகு ஆச்சரியமாயிருக்கிறது. இந்தியர்களைத் தவிர வேறு ஜாதியாரும் செய்திருக்கலாமென்று துணிவதும் நியாயமே. எப்படியிருந்தாலும் குற்றவாளியைக் கண்டு பிடிக்க வேண்டியதவசியம் ஒரு லக்ஷம் ரூ வெகுமதி கொடுப்பதாகச் சொல்லியும் இன்னும் உண்மை வெளிவரவில்லை.!!

---

பத்திராதிபர்.

471

உ

# உதாஸீநவாது ஸ்தோத்ரம்.

## முகவுரை.

---

இது வேதாந்தமாகிய பெருங்கடலின் ஸாரத்தைச் சுருக்கி யாவரும் அதிசயிக்கத்தக்க நுண்ணிய விவரங்களுடன், குருபக்தி மூலமாய், உலகத்தோர்க்கு விளக்கிக்காட்டும் சிறந்த ஓர் நூல். இது உச்சரித்தலுக்கும் கேட்பதற்கும் ரம்மியமான பாம்பின் நடை யெனப் பொருள் தரும் 'புஜங்கப்ரயாதம்' என்னும் வடமொழிச் சந்தத்தில் 20 சுலோகங்களை யுடையது. முன்னொருகாலத்தில் ராமநகரத்தில் வாஸம் செய்த காசிதேசத்தரசனாகிய ஈசுவரீ நாராயண ஸிம்ஹர் என்பவருடைய குருவாயிருந்தவரும், 'காஷ்ட ஜிஹ்வர்' என்று மறுபெயர் கொண்டவருமான தேவதீர்த்தர் என்னும் ஓர் ஸந்யாஸியால் இயற்றப்பெற்றது. இந்நூலையிவர் இயற்றியதற்குக் காரணம், அதனால் முடிவில் அடைந்த பயன் முதலிய ஸகல விவரங்களையும் இவர் மரபில் உதித்த பிரஹ்மாநந்தர் எனும் பெரியோர் ஒருவர் இயற்றி யருளியிருக்கும் மிகவற்புதமும் விரிவுமான உரையிற் காணலாம். இவ்வுரையாசிரியரும், சங்கரபகவத்பாதாசாரியர் கருத்தைத் தழுவி, அத்வைத கிரந்தங்கள், பகவத்கீதை, பாரதம், பாகவத முதலியவற்றினின்றும் கணக்கற்ற மேற்கோள்களை எடுத்துக் காட்டி, மிகவும் இன்பமான எளிய நடையில் அதிக ஆழ்ந்த நுண்ணிய விவரங்களை விளக்கி விஸ்தாரமாய் ஸகல ஆக்ஷேபங்களும் நீங்கும்படி உரை செய்திருக்கின்றனர். இக்கிரந்தத்தின் மகிமையையும், உரையினது ஆழ்ந்தவகன்ற கருத்துக்களின் பெருமையையும் கிரந்தத்தைக் கண்கூடாய்ப் படிப்பவர்கள் நன்கு அறிவார்கள். வடமொழிப் பயிற்சியில்லாத தமிழர்க்கு உதவும்படி இதன் மூலத்தையும் அதன் மொழிப்பெயர்ப்பையும் சுருக்கமான உரையையும் பிரசுரித்திருக்கின்றேன். இது நம் நாட்டின் தென்பாகத்தில் இப்பொழுதுதான் பிரஸித்தம் செய்யப்படுகிறது.

ஆர். ஸௌந்தரராஜ ஐயர்.

# உதாஸீநஸாது ஸ்தோத்ரம்.

—o—

சுலோகம் 1. 𑌸𑌚𑍍𑌛𑍀𑌲𑌾𑌨𑍍 𑌸𑌦𑌾𑌚𑌾𑌰𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑍍 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌾𑌨𑍍
𑌹𑌰𑌿𑌂 𑌹𑌰𑌂 𑌸𑌮𑌂 𑌸𑍇𑌵𑌮𑌾𑌨𑌾𑌨𑍍।
𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇𑌷𑍁 𑌦𑍀𑌕𑍍𑌷𑌾𑌨𑍍 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑍍
𑌉𑌦𑌾𑌸𑍀𑌨𑌸𑌾𑌧𑍂𑌨𑍍 𑌪𑍍𑌰𑌣𑌤𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑍍॥

ஸச்சீலர்களும், ஸதாசாரத்தில் நிலைபெற்றவர்களும், பவித்ரர்களும், ஹரியையும், ஹரனையும் ஸமாநமாக வணங்குவோர்களும், ஆத்ம சாஸ்திரத்தில் தேர்ச்சியடைந்தவர்களும், பரப்ரஹ்மத்தில் நிலையுற்றவர்களுமாகிய உதாஸீந ஸாதுக்களை (மிகப்பணிவுடன்) நமஸ்கரிக்கிறேன்.

உரை:-(1) இந்நூலாசிரியராகிய தேவதீர்த்தர் என்பவர் பிருஹதாரண்யகோபநிஷத்தில் கூறப்பட்ட மஹாபிராஹ்மண லக்ஷணங்களையுடைய ஓர் ஸந்யாஸி. மிகவும் கருணையுடையவர். இவர் பிராரப்த கர்மத்தால் விளைந்த ஓர் கொடிய நோயினால் வருந்தினர். அதற்கு அவர் பல சிகித்ஸைகளைச் செய்தும் பயன்படாததால், முடிவில் தைவிக உபாயம் ஏதேனு மொன்றை வியாதியின் நிவிர்த்திக்காகச் செய்தல் வேண்டுமென அவர் மநத்தில் ஓர் யோசனை பிறந்தது. அவர் ஆலோசித்ததாவது:— க்ஷேமத்தைக் கோருகிறவன் ஆத்மக்ஞாநியைப் பூஜித்தல் வேண்டும்; ஸாதுக்களின் தர்சநம் புண்ணியமாகும், ஏனெனில் ஸாதுக்கள் மிகவும் பவித்ரர்கள், ஸகல தீர்த்தங்களையும் தங்கள் ஹிருதயங்களில் வஸிக்கும் கடவுளின் அருளால் பவித்ரமாக்குகிறார்கள்; ஜலமயமான தீர்த்தங்கள் தீர்த்தங்களன்று, மண், கல் இவைகளினலாக்கப்பட்ட தேவர்கள் தேவர்களன்று, ஏனெனில் இவைகள் வெகு காலத்தின் பின்னர் தான் தம்மை வணங்குவோர்களைப் பாவநம் செய்யும் என்று சுருதி ஸ்மிருதிகளில் ஸாதுக்களின் பெருமை விளக்கப்பட்டிருப்பதால், அவர்களே, அவர்களிலும் விவேகம் மைத்திரீ முதலான தைவஸம்பத்தை யடைந்த உதாஸீந ஸாதுக்களே மிகவும் மகிமையுடையவர்களாதலால் வணங்கத்தகுந்தவர்கள். அவர்களைதுஸ்தோத்

ரத்தை ஸாதாரணமாகப் படிப்பவர்க்கு சுபமாகிய அதிருஷ்டமும், ஆழ்ந்து படித்து அதன் கருத்துணர்ந்து அதன் வழி மதத்தை நிறுத்துவோர்க்கு ஸாதந சதுஷ்டய ஸம்பத்தை யடையும் வழியும், அப்பாலுள்ள பிரஹ்மாத்மைக்யப் பேறும் உண்டாகுமென்பதைக் கருத்திலுன்னி, ஸாதகங்களை அடைந்து முயற்சி செய்வோர்க்கு உயர்ந்த ஆத்மலாபம் கிட்டுவதற்கு வழிகளான லக்ஷணங்களாயும் தம்முடிவை யடைந்த ஜீவன்முக்தர்கட்கு இயற்கையில் அமைந்த குணங்களாயும் உள்ள ஸுசீலாதி குணங்களை வேதசாஸ்திர புராணங்களில் கூறியிருக்கிறபடி, தனது கியாதி நீரவேண்டுமென்ற வியாஜத்தை வைத்துக்கொண்டு 20 சுலோகங்களடங்கிய இக்கிரந்தத்தில் விளக்குகின்றார்.

(2) உதாஸீந ஸாதுக்களை யான் நமஸ்கரிக்கின்றேன் என்பதை ஒவ்வொரு சுலோகத்திற்கும் மகுடமாக உபயோகிக்கிறார். உதாஸீநர்கள் ஸித்தர்கள், ஸாதகர்களென இருவகைப்படுவர். முதலாவது வகுப்பில் உதாஸீந என்னும் பதம், உத் என்றால் உயர், உபரி அதாவது பரப்பிரஹ்மத்தில் தத்வமஸி முதலிய மஹாவாக்கியங்களின் கருத்தின் பிரத்தியக்ஷாநுபவத்துடன் ஆஸீந, நிற்பவர் எனப் பொருள் தரும்;

"𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵𑌭𑌵𑌤𑌿"

"𑌜𑍍𑌞𑌾𑌨𑍀 𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑍈𑌵 𑌮𑍇 𑌮𑌤𑌮𑍍"

"பிரஹ்மத்தையறிந்தவன் பிரஹ்மமேயாகிறான்," "ஞானியானவன் ஆத்மா என்பதே என் அபிப்பிராயம்" முதலிய சுருதி ஸ்மிருதி வாக்கியங்கள், இதற்குப் பிரமாணங்களாகும். இனி இரண்டாம் வகுப்பில் உத்பரப்பிரஹ்மத்தில் ஸாதந சதுஷ்டய ஸம்பத்தியின் மூலமாய் மஹாவாக்கியங்களின் பொருளை யநுபவிக்கப்போகிறவர் எனப் பொருள் கொள்ளல் வேண்டும். இவ்விடத்தில் ஆஸீந என்னும் பதம் இறந்தகாலமாயினும், அதிசீக்கிரத்தில் ஸம்பவிக்கப் போகிறதை முன்னிட்டு வருங்காலத்தைக் காட்டுவதற்கு இறந்தகால வினையை யுபயோகித்தலும் வழக்கே யாதலால், வருங்காலத்தைக் காட்டுகின்றது. இவர்களே பகவத் கீதையில் அமானித்வம் முதலிய பிரஹ்மஞ்ஞாந ஸாதநங்களைப் பெற்றவர் எனக் குறிப்பிடப்பட்டவர்.

(3) இனி ஸாதுக்கள் எனின், காரியத்தை ஸாதிப்பவர், அதாவது நிறைவேற்றுவோர் எனப் பொருள் தரும். தங்கள் ஸ்வந்த பிரயோஜநமாகிய ஸம்ஸாரஸாகரத்தைத் தாண்டுதலை முடித்துக்கொண்டு, பிறர் யாவருக்கும் வேண்டிய ஸகலகாரியங்களையும் ஸாதித்துக் கொடுப்பவர் என்பதே. மேற்கண்ட பதங்களுக்கு உதாஸீநர்களும், ஸாதுக்களுமான பெரியோர் என்று அர்த்தமாகும்.

(4) இனி மூல சுலோகத்தில் நமஸ்வு என்னும் வினைச்சொல்லின் பிரயோகம் ஆத்மநேபதமாயிருத்தலின் இலக்கண விரோதமென்று சிலர் ஆக்ஷேபிக்கலாம். அதற்கு ஸமாதாநமாவது: அவ்விதம் ஆக்ஷேபிப்பவர் சங்கர மதஸ்தராயின், சங்கராசார்யரே மாண்டூக்யோபநிஷத்துக்குத் தாமியற்றியிருக்கும் பாஷ்யத்தின் முடிவில் ("தத்வாதௌவாவநீசைளஹவஹயவிந-ஷ்தௌஸவ-ஸாரெவெந-ஷ்ஃவெஸு") ஸம்ஸாரபயத்தைப் போக்கடிக்கிறவைகளும் பரம பாவநங்களும் ஆன குருவின் பாதங்களை நான் நமஸ்கரிக்கிறேன் என்னும் கருத்தைக் காட்டி நமஸ்வு என்று உபயோகித்திருக்கிறபடியால், பெரியோர் பிரயோகித்திருப்பதால் அஃது இலக்கண விரோதமாயினும் நியாயம் என்றே கொள்ளல் தகும். இனி ஏனையமதஸ்தர்களால் இவ்வித ஆக்ஷேபம் செய்யப்படுமாயின் அவர்களுக்கு உத்தரம் பின் வருமாறு:—நமஸ்வு என்னும் பதம் நமஸ்வு + ஐ என்று பிரிக்கப்படவேண்டும். ஸா எனின் லக்ஷ்மீ என்று அர்த்தம். அதன் விளி வேற்றுமை 'ஐ' ஆகிறது. ஆகலின் "ஹே! லக்ஷ்மி (நீ இவர்களை) நமஸ்காரம் செய்" என்பது முடிவான பொருள். இதற்கு அடியில் வருமாறு புராணக் கதை யிருக்கின்றது.

"முன்னொரு காலத்தில் லக்ஷ்மீ ஸஹிதராய் வைகுண்டத்தில் விஷ்ணு பகவாந் ஏகாந்தத்தில் வீற்றிருந்தனர். அச்சமயத்தில் பிரஹ்ம புத்திரர்களும் பரம உதாஸீநர்களுமான ஸநக ஸநந்தநா முதலியோர் பகவானைப் பார்க்க வந்தனர். அந்யர்களான இவர்கள் வரவைக் கண்டவுடன் லக்ஷ்மீ ஸ்த்ரீயாதலின் நாணமுற்று அந்தப்புரஞ்செல்லமுயன்றனள். அச்சமயம் பகவாந் "ஹே! லக்ஷ்மி!

476



நீ இவர்களை வணங்குவாய். அப்பொழுது நீ என்னை விட்டுப் பிரியாமலிருக்கலாம்" என்றனர். ஸ்ரீகிருஷ்ணபகவான் எப்படி கீதா சாஸ்திரத்தை அர்ஜுநனுக்குச் சொல்லுவதின் மூலமாய் உலகத்தார் முழுமைக்கும் உபதேசித்தாரோ, அப்படியே இக்கதையில், விஷ்ணு பகவானும் லக்ஷ்மீக்கு உபதேசிப்பதன் மூலமாய் உலகத்தவரை நோக்கி ஆத்மஸ்வரூபமாகிய விஷ்ணுவை யடைதலின் பொருட்டு பெரியோராகிய மஹான்களை வணங்குதல் அவசியம் என எடுத்துரைத்தனரெனக் கொள்ளல் வேண்டும் என்பதே."

இவ்விதம் விஷ்ணு லக்ஷ்மீக்கு உபதேசம் செய்தாரென்பது இச்சுலோகங்களின் கருத்தெனக் கொள்ள வேண்டுமாயின், நூலாசிரியராகிய தேவதீர்த்த ஸ்வாமிகள் அப்பெரியோரைத்தான் வணங்கவேண்டி இவற்றை யியற்றினரன்றெனப் பொருள் படும். அப்பொழுது அப்பெரியோரைத் தான் ஸ்துதிக்கவில்லை யாதலால், அவரது கருத்தாகிய வியாதி தீருதலும் இல்லை யென்று ஏற்படுமே யெனின், அப்படியன்று. விஷ்ணு பகவானால் உபதேசித்தபடி பெரியோர்களின் ஸ்துதிகளையே தானும் வாயார உச்சரித்துத் தனது கோரிக்கையை நிறைவேற்றிக் கொண்டனரென்பதே பொருள்.

'நிந-ஹேஷாஈஷே-ஷதி॥' என்ற ஸ்மிருதி வாக்கியப்படி நமஸ்காரம், ஸ்துதிகளை விலக்கி ஸந்யாஸியானவன் மொழிதல் வேண்டும் என்றிருப்பதால் எப்படி ஸ்வாமியானவர் ஸ்மிருதியால் விலக்கப்பட்டதை அநுஷ்டித்தாரென வினவுவார்க்கு உத்தரம் அடியில் வருமாறு:—ஆத்மதிருஷ்டியால் உயர்வுதாழ்வின்றி ஸமதிருஷ்டியுள்ள பிரஹ்ம நிஷ்டர்க்கு அது விலக்கேயாயினும், அந்த திருஷ்டி நீங்கி கீழ்ப்பட்ட கோசங்களில் வியவஹாரம் ஏற்படும் பொழுது, ஆஹாரம் ஏற்றல் முதலியன நிகழ்வது போன்று, நமது ஆசிரியர் தன் சரீரத்தின் ஆரோக்கியம் வேண்டுமெனக் கொண்டாரதலால் அந்த திருஷ்டியால், தான், பிறர் என்ற கொள்கையேற்படுதலும், அப்பொழுது பெரியோரை வணங்குதலும் கூடுமன்றே! அறிஞராதலின் ஏன் அப்படி ஸ்மிருதியானது நிஷேதிக்கும் காரியத்தைச் செய்தல் வேண்டுமெனின், இக்காரியம் நிஷி

த்த மன்று. அவ்விதம் நிஷித்தமெனச் சிலர் கொண்டாலும், சிரத்தை பக்தியின் மிகுதியால் உண்டாகும் பிரேமையாகும் பெரும் பிரவாஹத்தில் இவ்வித ஸ்வல்ப தோஷங்களான துரும்புகள் இருந்த விடம் தெரியாமல் அடித்துக் கொண்டு போகப்படுமென்பது வாஸ்தவமன்றோ! ஆதலின் நமது தேவதீர்த்தரின் மீதும் கடவுளின் பிரஸாதம் இரங்கி, அவரது வியாதியும் தீர்ந்ததெனப் பிரவித்தி ஏற்பட்டிருக்கின்றது. பெரியோரை வணங்குதல் கடவுளுக்கு எங்ஙனம் திருப்தியைத்தருமெனின், சாஸ்திர விதிப்படி கல், மண் முதலியவற்றினுல் ஆகிய மூர்த்திகளில் கடவுளை அர்ச்சிப்போர்க்கு, ஸச்சிதாநந்த மயமான திருமேனியையுடைய பகவாந் பிரஸாதமும் கொடுப்பாரென்பது உண்மையானுல், அவரிடம் பதிந்த சிந்தையுடையோராய், முழுமையும் அவரதியற்கையில் கலந்தவராய், விளக்கும் உதாஸீந ஸத்புருஷரிடம் கடவுளை வழிபட்டால், அவரது திருவருள் கிடைக்குமென்பது சொல்லப்படவும் வேண்டுமோ? ஆதலின் ஸதாகாலமும் பரமாத்மபதவியின் அநுபவத்தால் ஏனைய பிராபஞ்சிக வாஸனையை முழுதுந் துறந்த பெரியோரை வணங்குவதே ஈசனது திருவருளைக் கொடுத்து, ஸம்ஸாரமாகிய துன்பக்கடலைத் தாண்டுதலுக்குதவும் மிகவும் ஸுலபமானதோர் ஓடமென அவ்விதநாட்டமுடையோர் யாவரும் துணிதலே மாண்பு.*

(5) ஸுசீலர்கள், சோபநமான சிலத்தை உடையவர்கள். சீலம் என்றால் பூர்வஜந்மங்களில் செய்திருக்கும் மாநஸிக, காயிக, காயிகங்களான காரியங்களின் பயன்களாய், தற்காலத்தில் புதிதான காரியங்களை ஏற்படுத்தி வைக்கும் காரணங்களாய், அவரவரிடம் தங்கி நிற்கும் ஸ்வபாவமே. இந்த சிலம் நற்காரிய நற்சிந்தனைகளால் ஏற்படும் நற்சிலமும், தீயவற்றால் அமையும் துர்ச்சிலமும் ஆக இருவிதமாகும். இதில் முற்சொன்னதான தைவிக ஸம்பத்துக்கள் ஞாநத்திற்கு ஸாதநங்களான நிஷ்காம கர்மம், தியாகம் இவற்றை உண்டு

* "படமாடக் கோயிற் பகவற்கொன் றீயி
னடமாடக் கோயி னம்பர்க்கங் காகா
நடமாடக் கோயி னம்பர்க்கொன் றீயிற்
படமாடக் கோயிற் பகவற்க தாமே."

என்ற திருமந்திர வசநம் இங்கு கவனிக்கத் தக்கது.

பண்ணி ஒருவனை மோக்ஷத்துக்குக் கொண்டு விடும்; இரண்டாவதோ ஆஸுரஸம்பத்து ரூபமான காமம், குரோதம், பரஹிம்ஸை இவற்றில் உத்ஸாஹத்தைக் கொடுத்து ஸம்ஸார பந்தத்தை விருத்தி செய்யும். இதற்கு கீதையில் பிரமாணங்கள் அடியில் வருமாறு:

"அபயம் ஸத்த்வஸம்ஶுத்தி:" இத்யாதி
"தைவீ ஸம்பத்விமோக்ஷாய
நிபந்தாயாஸுரீ மதா"॥

"அபயம், சித்த சுத்தி முதலிய தைவிக ஸம்பத்துக்கள் மோக்ஷத்திற்கும், ஆஸுர ஸம்பத்துக்கள் பந்தத்திற்கும் காரணமாகின்றன."

ஆகலால் ஸுசீலாதி வசநங்களுக்கு, தைவிகஸம்பத்து ரூபமான தத்வக்ஞாந ஸாதநங்களை அநுஷ்டித்தற் பாலதெனக் கருத்தில் கொள்வோரும், அல்லது பூர்வஜந்மங்களில், அவற்றை அநுஷ்டித்ததின் பயனாக அக்குணங்களை ஸ்வபாவத்தில் அமையப் பெற்றவர்களும் என்பது பொருள்.

(6) ஸதாசாரத்தில் நிலைபெற்றவர்களும்:—வேதவிஹிதமான ஸதாசாரங்கள், தத்வக்ஞாநத்தை அடைதலின் பொருட்டோ, அல்லது உலகத்தவர்க்கு வழிகாட்டும்பொருட்டோ நல்வழியில் நிற்பவர்கள் என்பது பொருள். இதற்கு ஆதாரமாக கீதையில்:

"லோகஸங்க்ரஹமேவாபி ஸம்பஶ்யந் கர்துமர்ஹஸி"

"உலகத்தார் நேர்மையாய் வாழும் பொருட்டாவது கர்மம் செய்தல் வேண்டும்" எனக்கூறப்பட்டிருக்கிறது.

(7) பவித்ரர்களும்:—உலகத்தை ரக்ஷித்தற்பொருட்டு வெளிப்படையாய்க் கர்மங்களைச் செய்து வந்தாலும் நிறைந்த நீர்க் குடத்தைத்தலைமேல் வைத்து நடநம்செய்யும்ஸ்திரீயின்சித்தம் எவ்விதம் அந் நீர்குடத்தின் மேல் நிற்குமோ, அவ்விதம் பிரஹ்மத்தில் சித்தத்தை வைத்தவர்களாதலால் எவற்றையும் பாவநமாக்கும் தன்மையுள்ளோர் ஆவர், அதாவது "ஸ்வயமான தநவானே தான் பிறரைத் தநவான் ஆக்குதல் கூடுமென்பது போல் தாங்களே பவித்திரர்களாதலால் தான் பிறர்களையும் பவித்திரராக ஆக்கக்கூடியவர்கள் என்பது இதன் பொருளாம்.

## பட்டு பீதாம்பர கம்பெனி.

| | | |
|---|---|---|
| திருப்தியில்லாததைத் திரும்பப் பெற்றுக்கோள்ளலாம். | ஸ்ரீ காசி | பட்டு பீதாம்பரக் காட்லாக் இனமாக அனுப்பப்படும். |

### உருத்திராக்ஷங்கள் ஜபமாலைகள் பரிசுத்தமானது.

108 உள்ள மாலை 1-க்கு 6அணா முதல் ரூபா 12 வரை. விலை அதிகப்படுவதுபோல் மணிகள் சிறிதாக இருக்கும். 6முகக்கண்டிகள் 33உள்ளது, கண்டி 1க்கு ரூபா 1முதல் 10 வரை. 5 முகக்கண்டி 32 உள்ளது; கண்டி 1க்கு அணா 10 முதல் ரூபா 10வரை. விலை அதிகப்படுவதுபோல், மணிகள் பெரிதாக இருக்கும். சம்மதமில்லாதவை திரும்பப் பெற்றுக்கொள்ளப்படும்.

### காசி வயிரவர் கயிறு.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| முதல் நெம்பர் 100-க்கு | ... | ... | 3 | 0 | 0 |
| 2-வது நெம்பர் 100-க்கு | ... | ... | 2 | 8 | 0 |
| 3-வது நெம்பர் 100-க்கு | ... | ... | 0 | 6 | 0 |

### குழந்தைகள்.

குழந்தைகள் விளையாடக்கூடிய பித்தளை வெண்கலத்தால் செய்த செம்பு குடம், கரண்டிமுதல் 32 சாமான்கள் அடங்கிய அழகும் நேர்த்தியும் நைசும் பளபளப்புமுள்ள அழகிய பாத்திரங்கள் 32 உள்ள சிறுசெட்டு 1-க்கு ரூபா 2, பெரிய செட்டு 1-க்கு ரூபா 4.

வெண்பட்டு வேஷ்டிகள்:—சுத்தமான வெண்பட்டு வேஷ்டிகள், கோயம்புத்தூர் வேஷ்டிகள் மாதிரி சன்னக்கம்பி, ருத்திராக்ஷக்கம்பி ஜரிகைக் கம்பி போட்டவை.

| முழம். | அகலம். | ரூ. முதல். | | வரை. | முழம். | அகலம். | ரூ. முதல். | | வரை. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 2½ | 7 | ,, | 9 | 8 | 3 | 12 | ,, | 81 |
| 6 | 3 | 10 | ,, | 12 | 9 | 3 | 14 | ,, | 20 |
| 7 | 2½ | 8 | ,, | 12 | 10 | 3 | 15 | ,, | 22 |
| 7 | 3 | 10 | ,, | 14 | | | | | |

விலாசம்: மானேஜர் பட்டுபீதாம்பர கம்பெனி, காசி

**Benares City.**



## பெண் கல்வி.

### சித்திர சகிதமான ஒரு மாதாந்த சஞ்சிகை.

இப்பத்திரிகை ஸ்திரீகளின் நிலைமையை உயர்த்துவதற்காகவே தோன்றிய ஒன்றாகும். இதில் ஸ்திரீகள், தாய், மனைவி, சகோதரி, புத்திரி முதலிய பல நிலைகளில் செய்யவேண்டிய கடமைகளும் குடும்ப நிர்வாக சாஸ்திரம், வைத்தியவிஷயம், சுகாதாரவிஷயம் இவைகளைப்பற்றிய விஷயங்களும், ஒழுக்கம், குணம், கல்வி முதலியவற்றில் கீர்த்தியடைந்துள்ள தற்கால முற்கால மாதர்களின் சரித்திரங்களும் இனிய தமிழில் வெளியிடப்படும்.

இதற்குவிஷயங்கள் எழுதுபவர் முக்கியமாய் ஸ்திரீகளேயாவர்.

☞ இப்பத்திரிகை ஒவ்வொரு குடும்ப ஸ்திரீயும், வாத்திச்சிமார்களாகப் பயிற்சிபெறும் ஒவ்வொரு ஸ்திரீயும் படிக்கவேண்டியது அவசியம்.

வருஷசந்தா ரூ 2—8—0. தனிப்பிரதி 0-4-0. மாதிரிப்பிரதி வேண்டுவோர் ஒரு அணா ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக் கொள்ளவும்.

சகோதரி ரேவு தாயாரம்மா, பத்திராதிபர், பெண்கல்வி, சென்னை.

பல கண்காட்சிகளில்
மெடல்களைப்பெற்ற அபூர்வ ஔஷதங்கள்.

---

# பி. சுப்பராய், ஆயுர்வேத

## ஔஷதசாலை,

ஸ்ரீ வெங்கடேச பெருமாள்கோவில் சன்னிதி, தஞ்சாவூர்.

தயவு செய்து

**இதை தங்கள் சிநேகிதர்களுக்கு வாசிக்கக் காண்பியுங்கள்**

---

## பி சுப்பராயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

**சுகந்த மூக்குத்தூள்:**—இந்த மூக்குத்தூள் மிகவும் நேர்த்தியான முறையால் செய்யப்பட்டிருக்கிறது. வெகு இன்பமான வாசனையுடையது. ஒரு நாளைக்கு ஒரு மனிதன் எவ்வளவு மூக்குத்தூள் உபயோகிப்பானோ அவ்வளவு சாதாரண புகையிலை மூக்குத்தூளுடன் நம்முடைய சுகந்த மூக்குத்தூளில் ஒரு சிட்டிகை எடுத்து நன்றாய்க் கலந்து கொண்டால், அந்தத்தூள் முழுவதும் அதிக மனோரம்மியமான வாசனையுள்ள மூக்குத்தூளாகிவிடும். கடைகளில் விற்கும் சாதாரண மூக்குத்தூளுடன் ஒரு சிட்டிகை சேர்த்தாலே போதுமானது. தனிமையாக உபயோகப்படுத்துவது அனாவசியம். இத்தூள் சேர்ந்தமூக்குத்தூள் கெடாமல் நெடு நாள் சுகந்த பரிமளத்துடன் காரம்போகாமல் இருப்பதுமின்றி, சுவாசனை மூக்கில் சுற்றிக்கொண்டேயிருக்கும். தலைவலி, பீனிசம், ஜலதோஷம், நாசியிலிருந்து நீர்வடிதல், மண்டைக்குற்று, சீர்பீனிசம், நாசியில் துர் நாற்றம், மயக்கம் முதலியது தீரும். இதில் கவாச்சாரம் சேரவில்லை. வழக்கமாக மூக்குத்தூள் உபயோகிப்பவர்களிடத்திலுள்ள துர் நாற்றத்தை நீக்கி, சதா கம கமவென்று பரிமளத்தை வீசிக்கொண்டேயிருக்கும். இத்தூள் உபயோகித்தால் அடிக்கடி நசியம்போடுகிற வழக்கத்தை நாளுக்குநாள் குறைத்து கடைசியில் சிலர் தூள்போடும் அப்பியாஸத்தையே முற்றிலும் விட்டுவிடும்படிக்கு செய்யும். ஒரு சீசாவிலுள்ள சுகந்தமூக்குத்தூள் சுமார் ஒருமாதத்திற்கு போதுமானது. சீசா 1-க்கு விலை அணா 4, வி. பி. செலவு 1 முதல் 3 சீசாக்கள் வரையில் அணா 3 பிரத்தியேகம். 4 முதல் 6 சீசாக்கள் வரையில் வி. பி. செலவு அணா 5 பிரத்தியேகம். 7 முதல் 12 சீசாக்கள் வரையில் வி. பி. செலவு அணா 7 பிரத்தியேகம்.

---

என்னுடைய ஔஷத சாலையின் ஹெட் ஆபீஸை பரங்கிப்பேட்டையிலிருந்து தஞ்சாவூருக்கு ஸ்திரமாக மாற்றியாய் விட்டபடியால், இனி எல்லா ஆர்டர்களும், இப்பக்கத்தின் தலையில் அச்சிட்டிருக்கும் எனது ஹெட் ஆபீசாகிய தஞ்சாவூர் விலாசத்திற்கே எழுதக் கோருகிறேன். பரங்கிப் பேட்டைக்கு எழுதவேண்டாம்.